*Registered as a News paper in Sri Lanka*

விலை ரூபா: 8.00

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | ஆனி 29 | புதன்கிழமை (13.07.2005) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 206

ராம்கோ
MADRAS CEMENTS LTD
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
RAMCO CEMENT
சீமெந்து

# திருமலையில் நேற்று ஹர்த்தால்

## இராணுவம் மீது துப்பாக்கிச் சூடு; பொலிஸ் மீது கைக்குண்டு வீச்சு

## நகரில் பதற்ற நிலை தொடர்கிறது

(நமது நிருபர்)

**திருகோணமலை செல்வநாயகபுரத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுதலைப்புலிகளின் போராளிகள் உட்பட நால்வர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்று திருகோணமலையில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.**

**ஹர்த்தாலின்போது பொலிஸாரின்மீதும், இராணுவத்தினர் மீதும் துப்பாக்கி மற்றும் கைக்குண்டு வீச்சுச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதன் காரணமாக அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.**

திருகோணமலை கதவடைப்பின் காரணமாக திருகோணமலையில் உள்ள அனைத்து வர்த்தக நிறுவனங்கள், பாடசாலைகள், அலுவலகங்கள்யாவும் இயங்கவில்லை, போக்குவரத்துச் சேவைகள் யாவும் முற்றாகச் செயல் இழந்து வீதிகள் வெறிச்சோடிக் காணப் (12ஆம் பக்கம் பார்க்க)



## காந்தரூபனின் நினைவு நிகழ்வில் தேசியத் தலைவர் பிரபா பங்கேற்பு

(கிளிநொச்சி)

கடற்கரும்புலி மேஜர் காந்தரூபனின் 15ம் ஆண்டு நினைவு யினரும் காந்தரூபன் செஞ்சோலையினரும் இணைந்து நினைவு கூர்ந்த இந்நிகழ்வின் ஆரம்பத்தில்



## இவ்வருடத்திற்குள் ஜனாதிபதித் தேர்தல் இல்லாவிட்டால் மக்கள் போராட்டங்கள்

### ரணில்விக்கிரமசிங்க எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் இவ்வருட இறுதிக்குள் ஜனாதிபதித்தேர்தல் நடத்தப்பட வேண்டும். இதற்கு அரசாங்கம், சட்டமா அதிபர், தேர்தல் ஆணையாளர் ஆகியோர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் தொடர்மக்கள் சக்திப்போராட்டங்கள் மேற்கொள்ளப்படுமென எதிர்க்கட்சித்தலைவர் ரணில்விக்கிரமசிங்க எச்சதித்துள்ளார்.

தற்போது ஆட்சியில் இருக்கும் ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் பதவிக்குவந்து 16 மாதங்கள் ஆகியும் நாட்டின் எந்தவொரு துறையையும் முன்னேற்றவில்லை.

சமாதான முயற்சிகள் முன்னேற்றங்காணவில்லை. விலைவாசி உயர்ந்து, பொருளாதாரம் நலிவடைந்துவிட்டது. 6மாதங்கள் ஆகியும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் எதுவும் சரியாக வழங்கப்படவில்லை.

ஆகவே அரசாங்கம் சட்டமா அதிபர், தேர்தல் ஆணையாளர் ஆகியோருக்கு நாம் கூறவிரும்புவது என்னவென்றால் மக்கள் உரிமையினை பாதுகாத்து ஜனாதிபதித் தேர்தல் ஒன்றினை இவ்வருடத்திற்குள் நடத்தவேண்டும் என எதிர்க்கட்சித்தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எனவே ஜனாதிபதித்தேர்தல் இவ்வருட இறுதிக்குள் நடாத்தப்படாவிட்டால் இவ்வாறான மக்கள் சக்திப்பேரணிகளை தொடர்ந்தும் நடத்துவோம் என ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்தார்.

ஐக்கிய தேசியக்கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்ட மக்கள் சக்தி நடவடிக்கையின் பின்னர் கொழும்பு லிப்ற்றன் சுற்றுவட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)



நாளில் தமிழீழ தேசியத்தலைவர் மேதகு.வே.பிரபாகரன் கலந்து கொண்டு நினைவு கூர்ந்தார். காந்தருபன் அறிவுச்சோலை பொதுச்சுடரினை சோதியா படையணி சிறப்புத்தளபதி கேணல் துர்க்கா ஏற்றிவைக்க, தமிழீழத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் பதவிக்குவந்து

யினை பாதுகாத்து ஜனாதிபதித் தேர்தல் ஒன்றினை இவ்வருடத்

போதே அவர் இதனைத் தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் பதிலுக்கு விடுதலைப்புலிகள் அதிருப்தி

(கிளிநொச்சி)

போராளிகளின் பாதுகாப்பான போக்குவரத்து தொடர்பாக அரசினால் அனுப்பப்பட்ட பதில் தொடர்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் அதிருப்தி அடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 26ஆம் திகதி கிளிநொச்சியில் இருந்து மட்டக்களப்பிற்கு படையினரின் வழித்துணையுடன் போராளிகள் பயணம்செய்த போது, போராளிகளை இலக்கு வைத்து இடம்பெற்ற கண்ணிவெடித்தாக்குதலை அடுத்து போராளிகளின் பாதுகாப்பான பயணத்திற்கு உத்தரவாதம் வழங்கும்படி அரசுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் 14நாட்கள் காலக்கெடு விதித்திருந்தனர்.

இந்நிலையில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்றாவ் ஹொக்லண்டுக்கும், அரசின் சமாதான செயலகப்பணிப்பாளர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்ட மாணவன் கைக்குண்டுவீசி கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தளவாயில் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்ட மாணவன் கைக்குண்டு வீசிக்கொல்லப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் சங்கரப்பிள்ளை பேரின்பம் (வயது 19) என அடையாளம் காணப்பட்டுள்ளார். குறிப்பிட்ட இளைஞன் கணனி வகுப்பிற்குச் சென்று தனது வீட்டிற்குத் திரும்பிக்கொண்டிருக்கையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

இன்று வெளிவர வேண்டிய 5-ம் தரபுலமைப் பரீட்சை மாதிரி வினாத்தாள் நாளை வெளிவரும். (ஆர்)

## பொதுக்கட்டமைப்புக்கு எதிரான வழக்கின் தீர்ப்பு வெள்ளிக்கிழமை

### உயர் நீதிமன்றம் அறிவிப்பு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புக்கு எதிராக இடைக்கால தடை உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்த மனுதொடர்பான தீர்ப்பை நாளை மறுதினம் அறிவிப்பதாக உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் 39 பாராளுமன்ற உறுப்பினர்கள் பொதுக்கட்டமைப்பினை ரத்துச்செய்ய வேண்டுமெனக் கோரி தாக்கல் செய்தமனு பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே உயர் நீதிமன்றம் இவ்வறிவித்தலை வெளியிட்டுள்ளது.

பொதுக்கட்டமைப்பின் தேசிய குழு மற்றும் மாவட்டக்குழு என்பவற்றுக்கு தாம் எதிர்ப்பு இல்லை எனத்தெரிவித்த மனுதாரரின் சட்டத்தரணிகள் பொதுக்கட்டமைப்பின் பிராந்தியக் குழுவிற்கே தாம் எதிர்ப்பினை வெளியிடுவதாக மன்றில் குறிப்பிட்டனர்.

குறித்த பிராந்தியக் குழுவிற்கு வழங்கப்படும் நிதிக்கு சட்டவலு இல்லாமையானது நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான விடயம் என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)


EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-234999
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...




# அரசாங்கம் கறுப்பு ஜூலையை மீண்டும் உருவாக்கி கரும்புலிகளை களத்தில் நிறுத்த விரும்புகிறதா?

## வினா எழுப்புகிறார் மா.க.ஈழவேந்தன் எம்.பி

**மீண்டும் கறுப்பு ஜூலையை உருவாக்கி கரும்புலிகளைக் களத்தில் நிறுத்த அரசாங்கம் விரும்புகிறதா? என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந் தன் வினாவெழுப்பியுள்ளார்.**

இது விடயம் குறித்து அவர் திருமலை எரிமலையாக உருவெடுக்கிறது என்று நாம் அண்மையில் பலதடவை எச்சரித்தபோதும், சந்திரிகா அரசும் சரி, எம்மவரும் சரி அதனை செவிமடுத்து, ஏற்ற நடவடிக்கை எடுக்காததன் விளைவு இன்று திருமலை கடற்புலித் தளபதி லெப்.கேணல் வேங்கை (டிக்கான்) உட்பட இளம்புலி, விஜேந்திரராசா, நாட்டுப்பற்றாளர் பாபு உட்பட அரிய உயிர்களை இழந்து நாம் இரத்தக் கண்ணீர் விடுக்கின்றோம்.

15.05.2005 இல் திருமலையில் புதர் சிலையை இரகசியமாக இரவோடு இரவாக, சிங்களப் பேரினவாதிகள், மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஜாதிக ஹெல உறுமய சேர்ந்து நிறுவிய போதே ஆபத்து எம் காலடியைச் சூழ்ந்து விட்டது. விழிப்போடு இருந்து புத்தர் சிலையை உடனடியாக சிங்கள அரசு அகற்ற வேண்டும். அல்லது நாம் அதனை அகற்றி இருக்க வேண்டும். இவ்வாறு அல்லாமல் நீதிமன்றத்தில் நாம் சரணடைந்தோம். நீதியை வழங்குவதற்குப் பதிலாக, நீதிமன்றமே குழப்பி எம்மையும் குழப்பத்தில் ஆழ்த்தி மாதங்கள் உருண்டோடிய நிலையில் இப்பிரச்சினை திருமலைக் கடற்படைத் தளபதியினதும் அவருடன் சேர்ந்த விடுதலை வீரர்களின் சாகடிப்பிலும் முடிந்துள்ளது.

### வரலாற்றுத் திரிபு

திருமலைப் பேருந்து நிலையத்தில் மலசலகூடத்திற்கும் இறைச்சிக் கடைக்கும் நடுவில் மாசுபட்ட, சூழலில் மாசற்ற புத்த பிரானின் சிலையை நிறுவி, அவரை அவமதித்ததோடு, தமிழ் மண்ணைத் திட்டமிட்டு அபகரிக்கும் முயற்சியையும் சிங்கள அரசு மேற்கொண்டது. அதனை நாம் வன்மையாகக் கண்டித்ததோடு அடுத்து ஒரு எச்சரிக்கையையும் விடுத்தோம்.

கண்ணையும் கருத்தையும் கவரும் மாபெரும் கந்தளாய்க் குளத்தைக் கட்டியவன் குளக்கோட்டன் என்பதை நாடும் நானிலமும் அறியும். எம் கூற்றினை ஆவணப்படுத்துகின்ற முறையில் ஒல்லாந்த ஆளுநரின் நாட்குறிப்பு ஏட்டின் குறிப்புக்களையும் ஆவணமாகக் குறிப்பிட்டிருந்தோம். இவ்விதம் நாம் குரல் எழுப் பிய போதும் கந்தளாய்க் குளத்தைக் கட்டியவன 7 ஆம் நூற்றாண்டில் அநுராதபுரத்தை ஆட்சிசெய்த அக்க போதி மன்னன் தான் என்று சிங்கள அரசு வரலாற்று நூல்களை திரித்து எழுதத் தொடங்கியது.

அத்தோடு அக்கபோதி மன்னனின் சிலையும் கந்தளாய் குளமருகே கட்டப்பட்டு திரை நீக்கத் திற்காகக் காத்திருக்கின்றது.

இந்த வரலாற்றுத் திரிபு 9ஆம் வகுப்புக்குரிய தமிழ் வரலாற்று நூலிலும் இடம் பெற்றுள்ளது. இவ் வரலாற்றுத் திரிபினை அறியாது பயில்கின்ற தமிழ் மாணவர் சமூகம், ஆயிரங்கால் மண்டபம் கொண்ட கோணேசர் கோயிலைக் கட்டிய குளக்கோட்டன் தான் இக் குளத்தையும் கட்டினான் என்று அறியாது மயக்கத்தில் மூழ்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

### திருமலையின் தனிச்சிறப்பு

திருமலை என்பது வெறும் நிலப்பரப்பு அல்ல. திருமலை முப்போக விளைச்சலுக்குரிய நிலவளமுடைய பூமி. திருமலையில் நிலவளம் மட்டுமல்லாது உலகின் தலைசிறந்த இயற்கைத் துறை முகத்தைக் கொண்ட கடல் வளமுள்ள பூமியாகவும் உள்ளது. நிலவளம், நீர்வளம், கடல்வளம் இவற்றோடு தொழில் வளமும் நிறைந்தது. இவை அனைத்தையும் மிஞ்சுகின்ற அளவிற்கு குரை கடல் ஓதும் நித்திலம் கொழிக்கும கோணமலையில் குடி கொண்டுள்ள கோணேசரின் அருள் வளமும் எமக்கு உண்டு என நாம் கூறியுள்ளோம்.

திருகோணமலை எம் உயிர் நாடி, இதய நாதம், இம்மண்ணை நாம் இழக்கின்ற போது, திருமலையை மட்டும் நாம் இழக்கவில்லை. மாறாக வடக்குக் கிழக்கை இணைக்கின்ற இணைப்புப் பாலத்தையே இழக்கவேண்டி ஏற்படும். ஈழத்தமிழரின் நிலப்பரப்பு துண்டாடப்படுகின்ற போது தமிழனின் வாழ்வும துண்டாடப்படுவது உறுதி. எனவேதான், திருகோணமலையை எப்படியும் காப்பாற்ற அனைத்துத் தமிழ் மக்களும் உறுதி பூண வேண்டுமென்று விடாது வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

### அரசின் சதி

திருமலையைக் காப்பாற்ற எமக்கு தரைப்படை, காவற்படை, வான்படை ஆகியவை வேண்டும். இவையனைத்திற்கும் மேலாக கடல் சூழ்ந்த திருகோணமலையைக் காப்பாற்ற கடற்படை எமக்கு வேண்டும். அந்தக் கடற்படையின் தளபதியாக, கடற்புலிகளின் தளபதியாக விளங்கியவர்தான் லெப்.கேணல் வேங்கை (டிக்கான்). சிங்கள அரசு திட்டமிட்ட சதியின் அடிப்படையில்தான் திருமலை - செல்வநாயக புரத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் அலுவலகம் மீது பட்டப்பகலில் இராணுவச் சீருடையுடன் வந்த ஏழுபேர் கொண்ட குழுவொன்று தாக்குதல் நடத்தியுள்ளது. ஏ.கே.ரக துப்பாக்கிகள், கிரனேட் குண்டுகளுடன் வந்த இவர்கள் சரமாரியாகச் சுட்டதன் விளைவாக தளபதி வேங்கை (டிக்கான்) இளம்புலி, வியஜேந்திரராசா, பாபு ஆகியோர் வீரச்சாவு அடையும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அத்துடன், குடிமக்கள் மூவரும் படுகாயமடைந்துள்ளனர். வீரச்சாவடைந்த் வேங்கை (டிக்கான்) அண்மையில் ஏற்பட்ட கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏற்பட்ட துன்பத்தைத் துடைக்க துடிப்போடு பணியாற்றியவராவார். இதனை மக்கள் மறவாத நிலையில்தான் இவர் கொலை செய்யப்பட்ட இடத்தில் ஒன்று கூடியதோடு தாக்குதல் நடாத்திவிட்டு தப்பிச் சென்ற வாகனத்தைத் துரத்திச் சென்ற போது, அவர்களை இராணுவத்தினர் தடுத்தனர். விடுதலைப் புலிகளைத் தாக்கிய வாகனம் குரங்குப் பாலம் இராணுவ முகாமை நோக்கிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### எழிலன் வழங்கும் சாட்சி

இவ்விதம் ஈவிரக்கமற்று, கொடூரமாக திருமலை நகரிலிருந்து மூன்று கல் தொலைவிலுள்ள செல்வநாயக புரத்திலுள்ள விடுதலைப்புலிகளின் முகாமில் இவர்களை சாகடித்துள்ள சிங்கள இராணுவம் தமக்கும் இந்த சாகடிப்புக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லையெனக் கூறித் தப்பிக்க முயல்கின்றனர். ஒரு மாத காலத்திற்குள் போராளி வேங்கையை (டிக்கானை) கொனறு தீருவோம் என்று இராணுவப் புலனாய்வுத் துறை அதிகாரி அறைகூவல் விட்டிருப்பதற்கு ஏற்ப, இப்போது அவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இவ்விடயம் பற்றி ஏற்கனவே திருமலை மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் எழிலன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும் தெரிவித்துள்ளார் என்பதும இங்கு நினைவு கொள்ளத தக்கது. எனவே, இவ் ஈவிரக்கமற்ற படுபாதகச் செயலை சிங்கள இராணுவமும் அவருக்குத் துணைபோன தமிழ்த்துரோகக் கும்பலும்தான் செய்துள்ளன என்பதற்கு நிறைய சான்றுகள் உண்டு.

### பொருந்தாப் பொய்யுரைக்கும் சிங்கள இராணுவம்

சிங்கள இராணுவமும் அவர்களுக்குப் பக்கத்துணையாகத் தமிழ்த் துரோகக் கும்பலும் செய்யக்கூடாத அனைத்தையும் செய்த பின்பு கூசாது பொய் பேச முனைகின்றார்கள். புலிகளின் முகாமில் சாகடிப்பை செய்த பின்பு தப்பியோட முயன்ற இக் கொலைக் கும்பலை பொலிஸார் மறித்தபோது 'இவர்களை மறிக்க வேண்டாம்' என்று இராணுவம் பொலிஸாருக்கு ஏன் கட்டளை இட்டது? திருமலை முழுவதும் ஆயிரக் கணக்கில் சிங்கள இராணுவம் முகாமிட்டுள்ள நிலையில் பட்டப்பகலில் (10.45க்கு) இப்படுகெலைகள் எப்படி நடைபெற்றது?

ஆளும் இனத்தின் அடி வருடிகளாகிய இராணுவமும் அவர்களுக்குத் துணைபோகும் தமிழ்த் துரோகக் கும்பலும் பொருந்தாப் பொய் பேசி தப்பி முயலக்கூடும். ஆனால், இப்படுகொலையைச் செய்தவர்களை ஊழ்வினை வந்து உறுத்தியே தீரும். அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாவது உறுதி. பொறுமையின் எல்லையைத் தாண்டும் நிலைக்கு வந்துள்ள விடுதலைப் புலிகள் தம் தளபதிகள் போராளிகளின் சாவை வெறுமனே பார்ததுக் கொண்டிருக்க மாட்டார்கள்.

இச்சாகடிப்பை ஒட்டி வஞ்சம் தீர்க்கின்ற முறையில் விடுதலைப் புலிகள் இனிமேல் நடாத்த இருக்கின்ற தாக்குதல் அகிலத்தின் கவனத்தை ஈர்த்த ஆனையிறவின் தாக்குதலையும், உலகையே கதி கலங்க வைத்த கட்டுநாயக்கா தாக்குதலையும் மிஞ்சுகின்ற முறையில் அமையும் என்பது உறுதி.

எம் உயிரனைய திருமலையை நாம் உயிர் கொடுத்தும் காப்போம். இவ் விடுதலைப்போராட்டத்தில் விடுதலைப் புலிகள் மட்டும் கலந்து கொள்ளப்போவதில்லை. தமிழ் மக்கள் அனைவரும் அவர்களுக்குப் பக்கபலமாக இருந்து களத்தில் குதிப்பது உறுதி. சாவா? வாழ்வா? என நடைபெறுகின்ற இவ்விடுதலைப் பேராட்டத்தில் நாம் பார்வையாளர்களாக இருக்க முடியாது. மாறாகப் பங்காளிகளாக மாறி எம் பங்களிப்பினைச் செய்வது உறுதி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

---

## இராசிபலன்

**13.07.2005**
**(ஆனி 29, புதன்கிழமை)**
**சப்தமி முன்னிரவு 4.26 மணிவரை**
**உத்தரம் காலை 6.50 மணிவரை**
**இராகுகாலம் 11.59 - 1.29 மணிவரை**
**சுபநேரம் 4.29 - 5.59 மணிவரை**
**அமிர்த சித்தம் ஆனி உத்தரம் தரிசனம்**

| | |
|---|---|
| மேடம் | பண வ்ருவாய், நோய் குணமடைதல், எடுத்த காரியம் கைகூடும், திடீர்பயணம். |
| இடபம் | காரிய இடையூறு, மனக்கவலை, சொத்துப் பிணக்கு, ஆரோக்கியக் குறைவு. |
| மிதுனம் | அற்பர் உறவு, பயந்த சுபாவம், புதிய முயற்சி, போசனசுகக் குறைவு. |
| கடகம் | இனிய அனுபவம், வாக்கு மேன்மை, தொழில் வருமானம், முயற்சி கைகூடும். |
| சிங்கம் | அமைதிக் குறைவு, காரிய தாமதம், மாதர் நட்பு, பொருள் விரயம். |
| கன்னி | நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை, சயனசுகம், பெரியோர் மதிப்பு. |
| துலாம் | உணர்ச்சிவசப்படுதல், உறவினர் வருகை, முயற்சி தாமதம், சுபசெலவு. |
| விருச்சிகம் | தொழில் சிந்தை, பெருமையடைதல், உறவினர் வழிநன்மை, போசன நன்மை. |
| தனுசு | சுபநிகழ்ச்சி, நண்பர்கள் உதவி, தொழில் நன்மை, அதிகாரம். |
| மகரம் | அச்சமான நிலை, உடல் உழைப்பு, கட்டுப்பாடு, புதிய விடயம். |
| கும்பம் | அமைதிக் குறைவு, குடும்பக் கவலை, பிரயாண பயம், போசன சுகம். |
| மீனம் | பண வருவாய், முயற்சி கைகூடும், பிரயாண நன்மை, கௌரவமான நிலை. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

\- வளவன்

---

## அமெரிக்க விசாவுக்கான காத்திருக்கும் காலம் நீடிப்பு

(லண்டன்)

அமெரிக்க விசாவிற்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர ஒதுக்கீட்டுக்கான காத்திருக்கும் காலம் நீடிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது.

அமெரிக்காவிற்குப் பயணம் செய்யும் பொருட்டு விசாவிற்காக விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாலேயே இந்த நிலைதோன்றியுள்ளதாக அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசா விண்ணப்பதாரிகளுக்கான காத்திருக்கும் காலம் தற்போது 30 நாட்கள் எனவும் மாணவர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கான காத்திருக்கும் காலம் 7 நாட்கள் எனவும் அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அமெரிக்காவிற்கு பயணம் செய்யவிரும்புவோர் நேரத்தோடு விண்ணப்பிக்குமாறு அமெரிக்க தூதரகம் கேட்டுக்கொண்டுள்ளது. (க-9)

## ஜனாதிபதி விருது வழங்கும் விழா

(கொழும்பு)

ஜனாதிபதி திரைப்படவிருது வழங்கும் விழா பண்டார நாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விழாவில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். 8 வருடகால இடைவெளிக்குப் பின்னர் இந்த விழா இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

சென்ற வருடத்தில் திரையிடப்பட்ட உள்ளூர் திரைபடங்களில் தங்களது திறமைகளைக் காட்டிய கலைஞர்களுக்கு ஜனாதிபதி விருதுகள் வழங்கப்பட இருக்கின்றன.

விருது பெறும் கலைஞர்களுக்கு ரொக்கப் பணமும் பரிசில்களும் வழங்கப்படும் எனத் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத் தலைவர் தெரிவித்துள்ளார். (க-7)

---


## உடன் விற்பனைக்கு உண்டு

**பின்வரும் பொருட்கள் விற்பனைக்கு உண்டு**

- ஒவ்செற் பிளேற் (பாவித்தது)
- ஈய எழுத்துக்கள் மற்றும் ஈய லெற்றுகள் (புதியது)
- புத்தகம், கொப்பி என்பவற்றிற்கு கிளிப்பிடும் மெசின் (அச்சகங்களுக்குரியது, சிறிய திருத்தம் உண்டு)
- சிறிய ஜெனறேற்றர்
- ஈய எழுத்துக்கள் வைக்கப்படும் கேஸ் (பலகையினாலானது)
- கோழிக்கூடுகள் மற்றும் கதிரைகளுக்கான பாலைத்தடிகள்
- வெற்றுப் பைவர்கள் (6 லீற்றர்)

**மலிவான விலையில் வழங்கப்படும். பார்வையிடும் நேரம் தினசரி மாலை 4.00 மணிக்குப் பின்னர்.**

தொடர்பு:-
விற்பனை முகாமையாளர்
வலம்புரி
இல 3, 2ஆம் ஒழுங்கை பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில்)

## சமுர்த்தி செயல்திட்டம் குறித்து சர்வதேச சமூகம் திருப்தி கண்டுள்ளது

(கொழும்பு)

சமுர்த்தித் திட்டத்திற்கு இதறகுமுன்னர் உதவி வழங்காத சர்வதேச சமூகம் இன்று உதவிகளை வழங்க முன்வந்துள்ளதாக சமுர்த்தி அமைச்சர் பவித்திரா வன்னியராட்சி தெரிவித்துள்ளார்.

இந்த சமுர்த்திச் செயற்திட்டம் தொடர்பாக சர்வதேச சமூகம் திருப்தி கண்டுள்ளமையே இதற்கான காரணம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

சமுர்த்தித் திட்டத்தின் புதிய செயல்திட்டங்கள் தொடர்பாக சமுர்த்தி அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு தெளிவுபடுத்தும் கூட்டம் ஒன்றிலேயே இவர் இதனைத் தெரிவித்தர்ர்.

கடந்த முறை பரிசில் இடம்பெற்ற உதவி வழங்கும் மாநட்டில் சர்வதேச சமூகம் வெளியிடட கருத்துக்கள் முற்றாக வேறுபட்டவை எனறும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (க-7)

## தமது கடமைகளை செய்யத் தவறும் ஊழியர்கள் குறித்து தகவல் தருக!

உரிய முறையில் கடமையாற்றத் தவறிய் சுகாதார ஊழியர்கள் தொடர்பாக தகவல்களை உடனடியாகத் தருமாறு சுகாதார அமைச்சு மக்களைக் கோரியுள்ளது.

தமது கடமையைச் செய்யத்தவறிய வைத்தியாகள், ஆண் பெண் தாதிகள், வைத்திய ஆய்வு கூட தொழிநுட்பவியலாளர்கள், சிற்றூழியர்கள் ஆகியோர்கள் தொடர்பாக தகவல்களைத் தருமாறு சுகாதார அமைச்சின் திடீர் சுற்றிவளைப்பு மற்றும் விசாரணைப் பிரிவு அறிவித்துள்ளதாக சுகாதார அமைச்சு விடுத்ததுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத் துறையில் இடம்பெறும் முறைகேடுகள் மறறும் கடமையில் இருந்து தவறியமை, வைத்தியசாலை ஊழியர்களின் சங்கங்களில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாகவும் அமைச்சுக்கு நாள்தோறும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று மாத காலப்பகுதியில் அமைச்சின் திடீர் சுற்றிவளைப்பு மற்றும் விசாரணைப்பிரிவு மேற்கொண்ட சோதனையின் போது வைத்தியசாலைகளில் பல் வேறு முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியர்கள், வைத்திய ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் வேலை நேரங்களின் போது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையங்களில் கடமையாற்றி உள்ளமை, சேவை நேரங்களில் வைத்தியசாலையை விட்டு வெளியேறியமை கடமைக்குச் சமூகமளிக்காமையை அறிவிக்காமை, விடுமுறையில் செல்லல் ஆகியனவே இந்த முறைகேடுகளில் அடங்கியுள்ளதாகத் தெரிவிககப்பட்டுள்ளது. (க-7)

## தொழிலாளர் தீர்வுச்சபை விரைவில் கணனிமயம்

(கொழும்பு)

தொழிலாளர் தீர்வுச்சபை நடவடிக்கைகளை விரைவில் கணனிமயப்படுத்த நதியமைச்சு தீர்மானித்துள்ளது.

வழக்குகள் தாமதமடைவதைத் தடுக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

நீண்டகாலமாக தொழிலாளர் தீர்வுச் சபைககு சமர்ப்பிக்கப்பட்ட வழக்குகளுக்கு உரிய நேரத்தில் தீர்ப்புகள் வழங்கப்படவிலலை என்று அமைச்சு சுட்டிககாட்டுகினறது.

16ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் இதுவரை விசாரிக்கப்படாத நிலையில் உள்ளதாகவும்,

அதனால் நாடளாவிய ரீதியில் உள்ள 38 தொழிலாளர் தீர்வு சபைகளையும் கணனிமயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் நீதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டதின் கீழ் ஒவ்வொரு தீர்வுச் சபைககும் 2 கணனிகளை வழங்கவும் அமைச்சு முடிவு செய்துள்ளது. (க-2)

## 'பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்' கிளிநொச்சியில் 16 இல் அறிமுகவிழா

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் 'பூவரசம் வேலியும் புலுனிக் குஞசுகளும்' கவிதைத் தொகுதி அறிமுக விழா எழு கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாடடில் எதிர் வரும சனிககிழமை மாலை 3.30 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எழுத்தாளர் இணுவையூர் சிதம்பர திருச் செந்திநாதன் தலைமையில் நடைபெறும இவ்விழாவில், பொது ஈகச்சுடர், தேசியக கொடியேற்றலைத் தொடர்ந்து, வரவேற்புரையை கவிஞர் வேலணையூர் சுரேசும், அறிமுகவுரையை யோகரட்ணம் யோகியும் நிகழ்த்தவுள்ளனர்.

மதிப்பீட்டுரைகளை கலாநிதி க.சோமாஸ் கநதனும், எழுத்தாளர் பு.சத்தியமூர்த்தியும் வழங்க, ஏற்புரையை நூலாசிரியர் புதுவை இரத்தினதுரையும், நன்றியுரையை திருமதி ஆதிலட்சுமி சிவகுமாரும் நிகழத்தவுள்ளனர்.

இவ்விழாவுக்கு இலக்கிய படைப்பாளிகள், ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும வண்ணம் எழு கலை, இலககியப் பேரவையினர் அழைப்பு விடுத்துள்ளனா. (ற)

### சிறைச்சாலைக்குள் கொண்டு செல்லப்படும்

## சட்டவிரோதப் பொருட்களைக் கண்டறிய நவீன தொ. நுட்பம் அவசியமாகும்

நாட்டில் உள்ள சிறைச்சாலைகளுள் சட்டவிரோதமாகக் கொண்டு செல்லப்படும் பொருட்களை தடுப்பதற்கு நவீன தொழில் நுட்பம் தேவையென சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் றூமி மர்சூர் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைக்ளில் நவீன தொழில் நுட்பம் இல்லை. அவற்றைப் பயன்படுத்தினால அரசுக்குப் பாரிய செலவு ஏற்படும். செலவுகளைப பார்க்காமல் அரசு நவன தொழில் நுட்பத்தை பயன்படுததினால் சிறைச்சாலைகளுக்குள் சட்டவிரோதமான முறையில் கொண்டு செல்லப்படும் பொருட்களைக் கண்டுபிடிக்கமுடியும் என்றும் அவர் மேலும கூறினார். (ற-8)

## சகாய நிதிக்குரிய விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

தமது வாழ்விடங்களை விட்டு இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்துள்ள வடக்கு கிழக்கு மாகாணத்தைச சேர்ந்த கல்விப் பொதுத் தராதர உயர் தர வகுப்புக்களில் கல்வி பயிலும் வறிய மாணவருக்கான சகாய நிதிக்குரிய விண்ணப்பங்களை மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு கோரியுள்ளது.

கல்வி மேம்பாட்டு புலமைப்பரிசில் திடடம் என்ற இந்தத் திட்டம் கிழக்கில் பல வருடகாலமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

நலன்புரி நிலையங்களில் வாழும் உயர் தர வகுப்பு மாணவர்களுக்கு மாதாந்தம 500 ரூபா வீதம் 27 மாதங்களுக்கு இந்த புலமை பரிசில் வழங்கப்படும். 2003, 2004 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து தற்சமயம் உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி பணிப்பாளர் நாயகம், கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைசசு, இல.34 நாரம்பிட்டிய வீதி நாவலர் எனும் முகவரிக்கு அனுப்பபடல் வேண்டும். (க-7)

## அம்பிகை நகர் மாவீரர்கள் நினைவாக நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டப்போட்டி

(சுண்டுக்குளி)

அம்பிகை நகரைச் சார்ந்த மாவீரர்கள நினைவாக அம்பிகை நகர் சனசமூக நிலையமும், உதய சூரியன் விளையாட்டுக் கழகமும இணைந்து நடாத்திய கரப்பந்தாட்ட போட்டி தொடரின் இறுதியாட்டங்கள கடந்த 10ஆம் திகதி அம்பிகை நகர் விள்ளயாட்டு மைதானத்தல் காலை 9.00 மணி தொடக்கம் நடைபெற்றன.

4 வீரர்கள் மாத்திரம் பங்குபற்றும் 20 நிமிடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கேம் முறையிலான இப் போட்டியில் 21 அணிகள கலந்துகொண்டன.

இப்போடடியில் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் செட்டிப்புலம் ஐயனார் அணி அதனை எதிர்த்தாடிய தம்பாட்டி காந்திஜி 'பி'பிரிவு அணியை 14:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

2ஆவதாக இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் அம்பிகை நகர் உதயசூரியன் அணியை தம்பாட்டி காந்திஜி 'ஏ' பிரிவு அணி 17:09 என்ற புள்ளி அடிப்படையில் வென்றது.

இறுதியாட்டத்தில் காந்திஜி 'ஏ' பிரிவு அணி செட்டிபுலம் ஐயனார் அணியை 21:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று வெற்றிக்கிண்ணததை தனதாக்கிக்கொணடது.

3அம் இடத்துக்கான தெரிவு ஆட்டத்தில் அம்பிகை நகர் உதய சூரியன் அணி தம்பாட்டி காந்திஜி 'பி' பிரிவு அணி 27:11 என்ற புள்ளிகள் கணக்கில் வென்று 3ஆம் இடத்தைத் தனதாக்கிக் கொண்டது. (க-110)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு நேற்று முதல் தடுப்பு மருந்தேற்றப்பட்டு வருகின்றதாக கோப்பாய் பொதுச் சுகாதார அதிகாரி அறிவித்துள்ளார்.

இன்று காலை 8.30 மணி முதல் 10.15 மணிவரை கொக்குவில் கிழக்கு பிரம்படி சனசமூக நிலையத்திலும்,

மு.ப.10.30 மணிமுதல் 12.30 மணிவரை கொக்குவில் பழைய தபாற்கந்தோர் ஒழுங்கையில் உள்ள இந்திரா சனசமூக நிலையத்திலும், பி.ப.12.45 மணிமுதல் 2.30 மணிவரை ஆடியபாதம் றோட் (திருநெல்வேலிச் சந்தைக்கருகில்) YMHA இலும் தடுப்பு மருந்தேற்றப்படவுள்ளது. (க)

## அந்தனி சில் மறைவுக்கு டக்ளஸ் அனுதாபம்

ஈ.வே.ரா.பெரியாரின் நாத்திகம் என்ற பத்திரிகையில் துணை ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் "வத்திக்கான் போப் முதல் வடக்கன் பாதிரி வரை" என்ற கட்டுரைத் தொடரை எழுதிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியவரும், இலங்கையில் தீப்பொறி என்ற வார இதழை நடத்தியவரும், இடதுசாரிச் செயற்பாட்டாளருமாகிய சொல்வேருழவர் அந்தனி சில்லின் மறைவு குறித்து இந்து சமய அலுவல்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அனுதாபம் தெரிவித்துள்ளார். (து)

## கறுவாத் தோட்ட கொலைச் சம்பவம்; விசாரணைகள் துரித கதியில்!

(கொழும்பு)

கொழும்பு கறுவாத் தோட்டப் பகுதியில முன்னாள் மாகாண அமைச்சர் ஒருவர் உட்பட 4 பேர் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கொழும்பு வடக்கு பிராந்தியப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

கொல்லப்பட்டவர்களின் கடந்த கால செயற்பாடுகள் குறித்து விசாரணைகள் மேற்கொல்லப்பட்டுவருவதாகவும அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அம் மாநாட்டில் மேலும் தெரிவிக்கையில்,

தறபோது நாம் மேற்கொள்ளும் விசாரணைகளின் அடிப்படையில் எமக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் உயிரிழந்தவர்களில ஒருவர் அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டவராவார்.

தேயிலைத் தோட்டம் உட்பட பல சொத்துககளுக்குச் சொந்தக்காரர். இங்கு தான் பல பிரச்சினைகள் இருந்துள்ளன. இது தொடர்பாக சிரமங்களை ஏற்படுததக்கூடிய பல சோகச் சம்பவங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பழைய சம்பவங்களை எடுத்துக் கொள்வோமானால் சிலர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் சிலர் கொல்லப்பட்டுள்ளனர். தேயிலை ஆராய்ச்சியாளர் ஒருவர் அங்கவீனமாகியும் உள்ளார். இவ்வாறு பல சம்பவங்கள இடம்பெற்றுள்ளன. இவ்வாறான சம்பவங்களை வைத்துத் தான் நாம் விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றோம் என்றார்.

கடந்த 8ஆம் திகதி இரவு கறுவாத் தோட்டப் பகுதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில் வாகனமொன்றிலிருந்து முன்னாள் மாகாண அமைச்சர் அமீன் உட்பட 4 பேர் சடலமாக மீட்கப்படடமை தெரிந்ததே.

பள்ளி வாசல் ஒன்றுக்குச் செனறு விடடுத் திரும்பிக் கொண்டிருக்கும் போது இவர்கள் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனத் தெரியவருகின்றது. (ற-8)

### காலாவதியான உணவுப் பொருட்களை வைத்திருந்த

## வர்த்தக நிலைய உரிமையாளர்கள் ஒன்பது பேருக்கு அபராதம் விதிப்பு

(துன்னாலை)

காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்த வர்த்தக நிலைய உரிமையாளர்கள் 9 பேருக்கு பருத்திததுறை மாவட்ட நீதிமன்றம் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் 27 ஆயிரம் ரூபா அபராதம விதித்து தீர்ப்பளித்துள்ளது.

வடமராட்சிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கே இவ்வாறு அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

கடந்த வாரம் சுகாதார பரிசோதகர் பா.பாலதேவா தலைமையிலான குழுவினர் வட்மராட்சி பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனைகளை மேற்கொண்டனர்.

இத்திடீர் சோதனையின் போது 9 வர்த்தக நிலையங்களில் காலாவதியான உணவுப் பொருட்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து குறிப்பிட்ட 9 வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கும் எதிராக பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் வழக் குத்தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணையின் போது குறிப்பிட்ட 9 பேரும் தமது குற்றத்தை ஒப்புக் கொணடனர்.

இதனையடுத்து பருத்தித்துறை மாவடட நீதிபதி க.அரியநாயகம் 9 வர்த்தக நிலைய உரிமையாளர்களையும் கடுமையாக எச்சரிக்கைசெய்ததுடன் அபராதமான தலா 3 ஆயிரதம் ரூபா வீதம் 9 பேரும் மொத்தமாக 27 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும என உத்தரவிட்டார். (க-101)

### மின்சாரம் வழங்க நடவடிக்கை

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு அம்பன, மணற்காடு, குடத்தனை பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப் பகுதியில் மின்கம்பங்கள் நாட்டப்பட்டு பல மாதங்களாக மின் இணைப்பு வேலைகள் நடைபெறாது இருந்து வந்தது.

இப்பகுதி மக்களின் அழுத்தம் காரணமாக இப்போது மின் இணைப்பு வேலைகள நடைபெற்று வருகிறது. (க-35)

## இன்று ஒரு தகவல்

# தசரதர் செய்த சபதம்!

வாழ்க்கையில் ஒரு சில சந்தர்ப்பங்களில் நாம் சில அவமானங்களைச் சந்தித்தே தீர வேண்டியிருக்கிறது. என்ன செய்வது? காலம் அப்படி! அவமானப்படுபவர்கள் உடனே அடங்கிப் போவது தான் பொதுவாக உலக வழக்கம்.

அவமானப்பட்டால், உடனே சீறி எழுபவர்களும் உண்டு!

தங்களுக்கு ஏற்பட்ட அவமானத்தையே ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு சிலர் வாழ்க்கையில் முன்னுக்கு வருவதும் உண்டு. ஆனால் அப்படிப்பட்டவர்கள் மிகவும் அபூர்வம் என்றுதான் சொல்ல வேண்டும்.

சாணக்கியன் தனக்கு ஏற்பட்ட ஓர் அவமானம் காரணமாக ஒரு சரித்திரத்தையே படைத்துக் காட்டியதை வரலாற்றில் படிக்கிறோம். இன்றைக்கு மனோதத்துவ நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

"அவமானப்பட்டால் உடனே அடங்கிப் போய்விடக்கூடாது. அதையே ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு மனதில் ஒரு வைராக்கியத்துடன் முயற்சி செய்தால் வாழ்க்கையில் எல்லோருமே முன்னேறலாம்" என்கிறார்கள். "அவமானம்" என்பதை நாம் "வைராக்கியம்-மன-உறுதி ஊக்கம் " என்று மாற்றிக்கொள்ளவேண்டும். அது தான் வெற்றிக்கு வழி!

ராமர் ஒரு வைராக்கியம் காரணமாகத்தான் இந்த உலகில் பிறநதார என்று ஒரு கதை உண்டு.அந்தக் கதை இது தான். "தசரதருக்கு ராமர் குழந்தையாக வந்து பிறக்க வேண்டும். அப்போதுதான் இங்கே இருக்கும் எல்லாக் கஷ்டங்களும் நீங்கும் என்று சர்வலோகமும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

ஆனால் ராமர் எப்போது வந்து பிறப்பார் என்று யாருக்கும் தெரியவில்லை. அந்தக் காரியம் விரைவில் நடைபெறவேண்டுமே! அதற்கு என்ன செய்வது? நாரதர் ஒரு நாள் தசரதரைத் தேடி வந்தார்.

"தசரதா! உனக்கு ஒரு செய்தி தெரியுமா?" என்று ஆரம்பித்தார். அவர் எப்போதும் இப்படித்தானே ஆரம்பிப்பது வழக்கம்!

"என்ன விஷயம்?" என்று கேட்டார் தசரதர்.

"தசரதா! நீ அடிக்கடி உன்னுடைய தேரில் ஏறிக்கொண்டு தேவலோகததிற்குப் போகிறாய்-வருகிறாய் அதெல்லாம் சரி தான்! தேவலோகத்திலும் உன்னை நல்ல படியாகத்தான் வரவேற்கிறார்கள். தேவேந்திரன் உன்னை அன்புடன் அழைத்துக்கொண்டு போய தன்னுடைய அரியாசனத்திலேயே தனக்குப் பக்கத்திலேயே- உட்கார வைக்கிறான். நீயும் மகிழ்ச்சியுடன் உட்கார்ந்து அவனுடன் பேசிவிட்டு வந்து விடுகிறாய். ஆனால் நீ இங்கே வந்ததற்குப் பிறகு அங்கே என்ன நடக்கிறது என்பது உனக்குத் தெரியுமா?" என்று வினவினார் நாரதர்.

"எனன நடக்கிறது? எனக்கு அதைப் பற்றி ஒன்றும் தெரியாதே!" என்றார் தசரதர். நாரதர் தசரதரின் அருகில் வந்து மெதுவாக அவர் காதோடு காதாகச் சொன்னார். "நீ அங்கே தேவேந்திரனுடன் உட்கார்ந்து பேசிவிட்டு வந்த பிறகு- நீ அங்கே உட்கார்ந்திருந்த அரியாசனத்தை தண்ணீர் ஊற்றி கழுவிச் சுத்தப்படுத்துகிறார்கள்! நீ என்ன, அந்த அளவுக்கு சுத்த மில்லாத ஆளா?" என்று கேட்டார்.

தசரதருக்கு இது மிகவும் அவமானமாகப் போய்விட்டது.

"அபபடியா செய்கிறார்கள்?" என்று கேட்டார். "ஆமாம்! நீ வேண்டுமானால் நான் சொல்வது உண்மையா இல்லையா என்று சோதித்துப பார்த்துக்கொள்" என்றார் நாரதர்.உடனே தசரதர் இதற்காக கவே புறப்பட்டு தேவலோகம் சென்றார். அங்கே வழக்கம் போல் இவரை வரவேற்று உட்காரவைத்துப் பேசிக்கொண்டிருந்தான் தேவேந்திரன்.சிறிது நேரம் பேசிக்கொண்டு இருந்து விட்டு, சரி... நான் கிளம் புகிறேன்" என்று புறப்பட்டார் தசரதர்.

தேவேந்திரனும் வாசல்வரை வந்து தசரதரை வழியனுப்பி வைத்துவிட்டு உள்ளே சென்றான்.

தசரதர் வெளியிலேயே சிறிது நேரம் மறைந்திருந்துவிட்டு ... மெதுவாக உள்ளே என்ன நடக்கிறது என்று எட்டிப்பார்த்தார்.

நாரதர் சொன்னது சரிதான்! தசரதர் உட்கார்ந்திருந்த ஆசனத்தை அங்கே இரண்டு தேவர்கள் கழுவிச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தார்கள்! தசரதரால் இதைத் தாங்கிக்கொள்ள முடியவிலலை. அவருக்கு மிகவும் அவமானமாகிவிட்டது! நேராகக் கிடுகிடுவென்று தேவேந் திரனிடமே சென்றார்.

"நான் உட்கார்ந்திருந்த இருக்கையை இப்படிக் கழுவிச் சுத்தப்படுத்துகிறாயே! நான் என்ன அந்த அளவுக்குப் பாவியா?' என்று மிகவும் கோபத்துடன் கேட்டார். "தசரதரே! மனிதனாகப் பிறந்தவனுக்கு மூன்று கடன்கள் உண்டு. அவற்றை தேவகடன், ரிஷிகடன், பித்ருகடன் என்று சாஸ்திரங் கள் குறிப்பிடுகின்றன. இவற்றைத் தீர்க் காதவன் பாவியாகிறான்.

"இவ்ற்றில் தேவர்களைப் பூஜிப்பதால் தேவகடன் தீருகிறது. ரிஷிகள் எழுதிய அருள் நுல்களைப் படிப்பதாலும் கேட்பதாலும் ரிஷிகடன் தீரும். மகான்களின் ஆசீர்வாதத்துடன் தவம் செய்து உத்தமனாக நல்ல ஒரு மகனை பெறுவதால் பித்ருகடன் தீருகிறது. உனக்கு அப்படி ஒரு மகன் இல்லை ! ஆனால் நீ பாவியாகிறாய். பாவி உட்கார்ந்திருந்த இடம் என்பதால் அதைக் கழுவிச் சுத்திம் செய்யவேண்டியது எங்கள் கடமை!" என்றான் தேவேந்திரன்.

இந்த இடத்தில் தான் தசரதருக்கு ஏற்பட்ட அவமானம் ஒரு வைராக்கியமாகவே மாறியது!

தேவேந்திரா' நன்றாகக் கேட்டுக்கொள். எல்லா வகையிலும் உத்தமனான ஒரு மகனைப் பெற்ற பிறகு தான் இந்த சபையில் மறுபடியம் நான் அடியெடுத்து வைப்பேன்" என்று தசரதர் கூறி விட்டுச் சென்றார். பிறகு அவர் புத்ரகாமேஷ்டி யாகம் செய்தார் .பிள்ளைகள் பிறந்தார்கள். இந்தக் கதையில் இருக்கும் கருத்து என்னவென்றால்... தேவேந்திரன் தசரதனை அப்படி அவமானப்படுத்திவிட்டால் தசரதருக்கு இப்படி ஒரு வைராக்கியம் பிறந்திருககுமா? யோசித்துப் பாருங்கள்.

நமக்கு ஏற்படும் சில அவமானங்களையும் வைராக்கியங்களாக மாற்றிக்கொள்வோம்.வாழ்க்கையில் முன்னேறுவோம்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## அரசியல் யாப்புத் திருத்தத்திற்கு அமைய

# இவ்வருட இறுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடாத்தப்பட வேண்டும் -லக்ஷ்மன் கிரியல்ல

(கொழும்பு)

உதநேச 2000ஆம் ஆண்டு அரசியல் யாப்புத் திருததத்திற்கு அமைய இந்த வருட இறுதியில் ஜனாதிபதித்தேர்தல் நடத்தப்படவேண்டும் என ஐக்கிய தேசியக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியினால் 2000ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட்ட அரசியல் அமைப்புத் திருத்தத்தில் ஜனாதிபதியின் 2ஆவது பதவிக்காலம் 1999ஆம் ஆண்டு ஆரம்பமாகி 2005ஆம் ஆண்டு முடிவடைவதாகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

1999ஆம் ஆண்டிலிருந்து கணக்கிட்டுப்பார்த்தால் ஜனாதபதி ஆறாண்டுகள் தனது பதவிக் காலத்தை பூர்த்தி செய்யவேண்டும்.

இந்தப் பிரச்சினை உயர் நீதிமன்றத்திற்குச் சென்றது. இந்த அரசியலமைப்பில் உள்ள அனைத்து சரத்துக்களுக்கும் உயர் நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனால் எமக்கு எந்தவித சந்தேகமும் இல்லை. ஜனாதிபதி 2ஆவது பதவிக்காலம் 2005ஆம் ஆண்டுடன் முடிவடைகின்றது. இவ்வருட இறுதியில் கட்டாயமாக ஜனாதிபதித் தேர்தலை நடத்தவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி எதிர்பார்க்கின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-8)

## முத்தலிப் கொலைச் சந்தேக நபர் 14 இல் மீண்டும் நீதிமன்றில் ஆஜர்

(கொழும்பு)

மேஜர் முத்தலிப் பின் கொலைக்கு உதவி அளித்ததாகக் கூறப்படும் பத்திரிகை ஆசிரியரான ஐ.டபிள்யு. சஞ்சிவ என்பவரை எதிர்வரும் 14ஆம் திகதி மீண்டும் நீதிமன்றில் ஆஜராகுமாறு கொழும்பு நீதிமன்ற நீதிவான் உத்திரவிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் குறித்த பத்திரிகை ஆசிரியரை நீதிமன்றல் ஆஜர் செய்த இரகசியப் பொலிஸார் விசாரணை அறிக்கை ஒனறினையும் சமர்ப்பித்திருந்தனா.

இதன்படி மேஜர் முத்தலிப் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு வசதிகளைச் செய்துகொடுத்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் பிரதிவாதிகள் மீது சுமத்தப்பட்டிருந்தன.

முத்தலிப்கொலையுடன் சம்பந்தப்பட்ட உதயன் என்பவரின் கோட்டையில் உள்ள வீட்டுக்குப் பல்முறை பயணம் செய்துள்ள சஞ்சீவ தமது நிட்டம்புவ வீட்டில் முத்தலிப்பின் கொலைக்காக பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை மறைத்து வைக்க உதவியதாகவும் பின்னர் பொரளைப் பகுதியில் முத்தலிப்பின் கொலைக்கான வேவு நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் இரகசிய பொலிஸாரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4,8)

## பாதிப்புற்ற சிறுவர்களுக்கு 10ஆயிரம் ரூபாநிதியுதவி

(முல்லைத்தீவு)

ஆழிப் பேரலையால் தாய் தந்தையரை இழந்த சிறுவர்களுக்கு முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் 'சங்கத்தில் வைத்து ஜேர்மனி புலம்பெயர் தமிழ் மக்களால் வழங்கப்பட்ட ஒரு தொகை நிதியுதவி நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தின் சமாசத்தலைவர் மரியராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை ஜேர்மனியில இருந்து வருகை தந்திருந்த சத்தியமூர்த்தி மற்றும் செல்வச்சந்திரன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

கருத்துரைகளை வெள்ளை மாவட்ட கடற்றொழிலாளா கூட்டுறவுச்சங்க சமாசத்தலைவர் மரிய ராஜா மற்றும் செல்வச்சந்திரன் ஆகியோர் வழங்கினர்.

இந்நிகழ்வின் போது 10ஆயிரம் ரூபா வீதம் 23 சிறுவர்களுக்கு இந்நிதி வழங்கப்பட்டன. (க-7)

## அடிக்கல் நாட்டல்

வவுனியா தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் புதிய செயலகத்திற்கான கட்டடத்துக்கு நேற்று முனதினம் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா வைரவ புளியங்குளம் பகுதியில் ஏற்கனவே இயங்கிவந்த செயலகம் புதிதாக 5 மாடிக் கட்டடமாக அமைக்கப்பட இருக்கின்றது.

இந்நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் துணை நிறைவேற்றுப பணிப்பாளர் கி.பி.றெஜி, வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானம் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

கடடடத்திற்கான முதற் கல்லை வவுனியா சித்தானந்தா இந்து இளைஞர் சங்கத்தின் தலைவர் ந.சேனாதிராசா நாட்டி வைத்தார். (க-7)

# இந்திய-நேபாளத்திலுள்ள நக்சலைட்டுகளுக்கு புலிகள் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் பயிற்சி

## புலனாய்வு அமைப்புகள் எச்சரிக்கை

(கொழும்பு)

இந்தியா- நோபாள நாடுகளைச் சேர்ந்த நக்சலைடடுகள விடுதலைப்புலிகள் மற்றும் பிரான்ஸ் தீவிரவாதிகளிடம் மனித வெடிகுண்டுத் தாக்குதல் பயிற்சி பெற்று வருகின்றனர் என்ற திடுக்கிடும் தகவலைப் புலனாய்வு அமைப்புகள் வெளியிட்டுள்ளன.

இதனால் இரு நாடுகளிலும் உள்ள முக்கிய பாதுகாப்பு அமைப்புகளுக்கும் முக்கிய தலைவர்களின். உயிர்களுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. குறிப்பாக நக்சலைட்டுக்கள் ஆதிக்கம் மிகக மாநிலங்களின முக்கிய தலைவர்களின் உயிருக்கு ஆபத்து அதிகரித்துள்ளது. அதனால் உசாராக இருக்கவேண்டும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது விடயம் குறித்து இந்திய இணையத்தளம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில்,

இந்தியாவின் பல மாநிலங்களில் நக்சலைட்டுகளின நடவடிக்கை அதிகரித்துள்ளது. உத்தரப் பிரதேசம்,உத்தராஞ்சல், பிகார், மத்திய பிரதேசம்,சட்டிஸகாா, ஒ்ரிசா,ஆந்திரா, மகாராஷ்டிரா, யார்க்கணட்,மேற்கு வஙகம்,கர்நாடகா,தமிழகம், கேரள மாநிலங்களில் நக்சலைடடுகள் செயற்படுகின்றன.இந்தியா மட்டுமன்றி அண்டை நாடான நோபாளத்திலும் நக்சலைட்டுகள் ஆதிக்கம் செலுத்துகின்றன. வெடிகுண்டு,கண்ணிவெடி, துப்பாக்கித்தாக்குதல்களில் ஈடுபட்டுவந்த நக்சலைட்டுகள் சர்வதேச தீவிரவாத அமைப்புகளுக்கு இணையான ஆயுதப்பயிற்சிகளைப் பெற முயற்சிக்கின்றனர்.

சர்வதேச அளவில் தற்போது பெரிய அச்சுறுத்தலாக இருப்பது மனித வெடிகுண்டுத் தாக்குதல்.விடுதலைப புலிகள், அலகெய்டா போன்ற சர்வதேச தீவிரவாத அமைபபுகளும் செச்சினிய தீவிரவாத அமைப்புகளும் இத்தாக்குதலில் நிபுணத்துவம் பெற்று விளங்குகின்றன.

இந்நிலையில் விடுதலைப்புலிகளிடமும் பிரான்ஸ் தீவிரவாதிகளிடமும்,இந்தியா, நேபாள நக்சலைட்டுகள் மனித வெடிகுண்டுத்தாக்குதல் பயிற்சி பெறுவதாக மத்திய புலனாய்வு அமைப்புகள் திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள்ளன.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் நக்சலைட்டுகள் மனித வெடிகுண்டுத்தாக்குதல் நடத்தக்கூடும் என்று மத்திய உள் துறை அமைச்சகத்தைப் புலனாய்வு அமைப்புகள் எச்சரித்துள்ளன.

இந்தத் தகவலை எளிதாக எடுத்துக்கொள்ள முடியாது. இது தொடர்பாக அரசை நாங்கள் எச்சரித்துள்ளோம்.என்று புலனாய்வு அமைப்பைச் சேர்ந்த மூத்த அதிகாரி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறிய விபரம்,

நக்சலைட் அமைப்பைச் சேர்ந்த 12 குழுக்கள் புலிகளிடம மனிதவெடி குண்டுத் தாக்குதல் பயிற்சியை முடித்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. நேபாள நக்சலைட்டுகளும் இதேபோல் பயிற்சி பெற்றுள்ளனர். உதராஞ்சல் மாநிலத்தில் பிரான் ஆயுதப்பயிற்சியாளர்கள உள்ளனர். அவர்களிடமும் பயிற்சி பெற்று வருகின்றனர்.

புலிகளிடமும் பிரான்ஸ பயிற்சியாளர்களிடமும் இந்தியா, நேபாள நக்சலைட்டுகள் மனித வெடிகுணடுத் தாக்குதல் பயிற்சி பெற்றார்களா இல்லையா என்பதை இன்னும் நாங்கள் முழுமையாக உறுதிப்படுத்தவில்லை. ஆனால்இவர்களுக்கிடையே உள்ள தொடர்பை உறுதிப்படுத்தி இருக்கிறோம்.

மேற்கு வங்கத்தில் பிரான்ஸ் தீவிரவாதிகள் செயல்பட்டுவருவதற்கான ஆவணங்களை அம் மாநில பொலிஸாா சமீபத்தில் கைப்பற்றினர். இந்தத் தகவல்கள் மிகவும் தீவிரமானவை. கவலைப்பட வேண்டியவை. இந்தத் தகவலில் ஒரு பகுதி உண்மையாக இருந்தாலும் கூட ஆபத்து தற்கால தீவிரவாதத்தில் மிகவும் ஆபத்தான விசயம் தற்கொலைப் படைத்தாக்குதல் தான்.

மனித வெடிகுண்டுத் தாக்குதலை தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் உலகளவில் இதுவரை எந்த பாதுகாப்பு அமைப்புக்களிடமும் முழுமையான அளவில் இல்லை. இருபது பேர் கொண்ட இருபது குழுக்களுக்கு புலிகள் தற்கொலைத் தாக்குதல் பயிற்சியளித்திருந்தாலும் இந்தியா மற்றும் நாட்டின் முக்கிய பாதுகாப்பு அமைப்புகளை மட்டுமன்றி முக்கிய தலைவர்களையும் நக்சலைட்டுகள் மனித வெடிகுண்டுத்தாக்குதல் நடத்திக்கொள்ளும் அபாயம் உள்ளது.

குறிபபாக நக்சலைட்டுகள் ஆதிக்கம் மிக்க மாநிலங்களின தலைவர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் நக்சலைட்டுகள் மனித வெடிகுண்டுத் தாக்குதல் பயிற்சி பெறுவதற்கான உறுதியான ஆதாரங்களை புலனாய்வு அமைப்புகள் இதுவரை சேகரிக்கவில்லை. இருப்பினும் சர்வதேச ஒருங்கிணைப்புக் குழுவின் மூலம் இதற்கான நிதியை நக்சலைட் ஆதரவு அமைப்புகள் திரட்டுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நக்சலைட்டுத் தலைமையிடம் பெல்ஜியத்தில் உள்ளது.

இந்த நிதியின் மூலம் வாங்கப்படும் பயங்கர ஆயுதங்கள்,வெடிகுண்டுகள்,நவன ரக துப்பாக்கிகள் , வங்கதேசம் மூலமாக இந்தியா மற்றும் நேபாளத்தில உள்ள நக்சலைட் அமைப்புகளுக்கு விநியோகிககப்படுகின்றன. வங்கதேசத்தில் 7 நக்சலைட்குழுககள் செயற்படுகின்றன. இவ்வாறு அதிகாரி கூறினார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# தமிழகப் பயணம்

பயணக் கட்டுரை

# கையடக்கத் தொலைபேசி திருடனைக் காட்டிக் கொடுத்தது

33 கீழானூர்க் கிராமத்திலிருந்து புறப்பட்ட மினிபஸ் பூந்தமல்லியை வந்தடைந்த போது மதிய நேரம் 1.30ஆக இருந்தது. ஏற்கனவே காலை உணவு உண்ட அதே கடையில், மதிய உணவுக்கு ஏற்பாடு செய்யப்படடிருந்ததால், அனைவரும் உணவுச் சாலையில் அமர்ந்து கொண்டோம்.

தமிழகத்துச் சாப்பாட்டுக் கடைகளில் யார் போய் இருந்தாலும் முதலில் டம்ளர் அல்லது கிளாஸில் தண்ணீர் வைத்து விடுவார்கள். அதன் பின்பு தான் என்ன சாப்பிடப் போகிறீர்கள் என்ற கேள்வி எழுப்பப்படும். இந்த வழமை எனக்கு புதுமையாக இருந்தது. யாழ்ப்பாணத்துச் சாப்பாட்டுக் கடைகளில் தண்ணீர் என்று கேட்டாலே, அது கிடைப்பதற்குக் குறைந்தது கால்மணிநேரமாவது எடுக்கும்.

இந்தச் சூழ்லுக்கு இசைவாகிப் போன எனக்கு தமிழகத்துச் சாப்பாட்டுக் கடைகளில் வைக்கப்படும் தண்ணீர் புதுமையாக இருப்பதில் நியாயப்பாடு இருக்கவே செய்யும். பூந்தமல்லி சாப்பாட்டுக் கடையில் நாம் உட்கார்ந்ததும் டம்ளரில் தண்ணீர் வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து வாழையிலை போட்டார்கள். வாழையிலையில் கூட ஓர் ஒழுங்குமுறை உண்டு. சோறு சாப்பிட இருக்கின்றவர்களுக்கு தலைவாழையிலை மட்டுமே போடப்படும். இந்த ஒழுங்கு முறைகளைகண்டறிவதற்கு எனக்கு சில நாட்கள் எடுத்தன.

தலைவாழையிலை போட்டதும், சப்பாத்தி கொண்டுவந்து இலைகளில் வைத்தார்கள் கூடவே சம்பல். எனது இலைக்கு சப்பாத்தி கொண்டு வநத போது நான் அதை ஏற்க மறுத்து விட்டேன். மறுப்பை சைகையால் மட்டுமே தெரிவித்தேன்.

எனது மறுப்போடு சப்பாத்தி அடுத்த மேசையிலுள்ள இலைகளை அலங்கரிக்க எனக்குள் ஓர் ஏக்கம். மதிய உணவாக சப்பாத்திக்குத் தான் ஓடர் கொடுத்தார்களோ! யாரிடமாவது கேட்கலாமென்றால் உடன் பிறந்த வெட்கம் தடுத்தாட்கொண்டது. எல்லோரும் சப்பாத்தி சாப்பிட்டுக் கொண்டிருக்க எனது இலை மட்டும் விதைப்பாரின்றி வானம் பார்த்துக் கிடக்கும் மண்டைதீவு வயல்கள் போல, வெறுமையாக இருந்தது.

தொடர்ந்தும் பொறுமை காக்க விருப்பமில்லாத நான் உணவு பரிமாறுபவரிடம் சோறு கிடையாதாப்பா? அவருக்கு மட்டும் விளங்கக் கூடியதாக மெல்லக் கேட்டேன்.

கொஞ்சம் பொறுங்க சார். சப்பாத்தி சாப்பிட்டதும் சோறு வைக்கலாம் என்றார்.

சப்ளையரின் பதில் என்னையும் தாண்டியதால் அருகில் இருந்தவர்கள் என்னைப் பார்த்தார்கள். அந்தப் பார்வையில் பரிதாபம் தெரியவில்லை.

மாறாக அடே; இதுக்குள்ள முழுச் சப்பாத்தியையும் சாப்பிட்டு முடிச்சுட்டானா, சரியான சாப்பாட்டு ராமனா இருப்பானோ என்பது போன்ற பார்வையே அவர்களின் கண்களில் தெரிந்ததாக எனக்குள் நினைப்பு.

இது அவர்களின் பார்வைக்குரியதல்லாவிடிலும், என் மனம் அப்படி நினைத்துக் கொண்டது. வெறும் இலையோடு காத்திருந்தேன். குறைந்தது இரண்டு சப்பாத்திகளையாவது ஒவ்வொருவரும் சாப்பிட்டிருப்பார்கள். அதன் பின்னர் சோறு வைக்கப்பட்டது.

கூடவே தயிர், ரசம், ஊறுகாய், பச்சடி என்ற சோடசங்கள்.

அப்பாடா, சோறு கிடைத்துவிட்டது. என்பணியைத் தொடங்கினேன். மதிய உணவை உட்கொண்டிருந்தாலும் எனக்குள் ஓர் குழப்பம். இது என்ன புதுமுறை, சப்பாத்தியைச் சாப்பிட்டுவிட்டு அதன் பின்னர் சோறு சாப்பிடுவது. தேவையில்லாத குழப்பமாயினும், அது பற்றி அறிய வேண்டுமென்ற முடிவோடு மினிபஸ்ஸில் ஏறிக் கொண்டேன்.

மதிய உணவை உண்டகளைப்போடு, அனைவரும் ஆசனங்களில் சாய்ந்து கொள்ள, உண்டவர்களின் உறக்க உடம்புகளைத் தாங்கிக் கொண்டு மினிபஸ், லேசான் இந்திய நிறுவனத்தை நோக்கிச் சென்றது.

## களவு அகப்பட்டது

லேசான் இந்திய நிறுவனத்தை மினிபஸ் சென்றடைந்ததும் அங்கிருந்து தினமணிக்குச் சென்றேன். நேரம் மாலை 4.00 மணியாகிவிட அவசர அவசரமாக கீழானூர்க் கணனி பயிற்சி நிறுவனம் தொடர்பான செய்தியை எழுதி ஆசிரியரிடம் சேர்ப்பித்தேன்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை என்பதால் அன்றைய தினம் விடுப்பு எடுப்பதற்கு தினமணி ஆசிரியர் அனுமதி தந்திருந்தார். நாளை லீவு என்ற திருப்தியோடு, தினமணி அலுவலகத்திலிருந்து வெளியேறினேன்.

நேரம் 6.00 மணியாகிவிட்டதால் அண்ணாசாலையில் மனிதச் சுமையைத் தாங்க முடியாமல் பேருந்து வண்டிகள் முசுவதும், முக்குவதுமாக ஓடிக்கொண்டிருந்தன.

27 எச் பஸ்ஸில் ஏறினால் மட்டுமே நுங்கம்பாக்கம் லொயலாகொலிச்சுக்குச் செல்லமுடியும் என்பதால் அந்த பஸ்ஸின் வரவுக்காகக் காத்திருந்தேன். என் காத்திருப்பை விரும்பாதது போல 27எச் பஸ், வஞ்சகமில்லாமல் பயணிகளை ஏற்றிவர நானும் அதில் ஏறி நுழைந்து கொண்டேன்.

பஸ்ஸில் ஆட்கள் நெருக்கடியாக இருக்கின்ற போது திருட்டுக்கள் நடைபெறுவது தமிழகத்தில் சர்வ சாதாரணம். இந்த உண்மையை எம்.ஆர்.ரி.சி. இணைப்பாளர் கலாநிதி செ.அருட்செல்வன் அவர்கள் முன் கூட்டியே கூறியிருந்தார்.

அதன் காரணமாக உள்ளகப் பயிற்சிக்குச் சென்ற நாம் அனைவரும் களவு விடயத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருந்தோம்.

## திருடன் அகப்பட்டான்

நான் பயணித்த பஸ் அண்ணா சாலை வீதியைக் கடந்தபோது பஸ்ஸில் பயணித்த இளைஞன் ஒருவன் திடீர் என பிளீஸ்... பிளீஸ் உங்களுடைய கான்போனை தாருங்கள்... பக்கத்தில் நின்ற ஒருவரிடம் கேட்டான். விடயத்தை இன்னதென்று கூறாமல் கான் போனைக் கேட்டபோதிலும் அந்த இளைஞனின் அவசரம்-முகபாவனையைக் கண்ட அந்த நபர் தனது கான் போனைக் கொடுத்தார்.

உடனடியாக ஏதோ இலக்கங்களைத் தட்டினான் இளைஞன். அவ்வளவுதான் பஸ்ஸுக்குள் இருந்த ஒருவரின் கான்போன் ஒலித்தது.

சனநெருக்கடிக்குள்ளும் இந்த இளைஞன் கான்போன் ஒலிகேட்கும் இடத்திற்கு பாய்ந்துசென்று இவன் தான்... இவன்தான் என்று உரக்கக் கத்தினார். விடயத்தை அறியாத பயணிகள் என்ன சங்கதி... என்று வினவ சேட் பொக்கற்றில் இருந்த எனது கான்போனை திருடியவன் இவன் தான்... என்ற இளைஞனின் பதில், பஸ்ஸுக்கு சற்று ஓய்வுகொடுக்க, நடுத்தர வயதுடைய அந்தக் கள்ளன் பஸ்ஸில் இருந்து இறக்கப்பட்டான். சம்பவத்தை அறிய பயணிகள் வீதியில் கூடி விட, ஐயா... எனது சேட் பொக்கற்றில் கான்போனை வைத்திருந்தேன். திடீரெனப் பார்த்தபோது என் கான் போனைக் காணவில்லை. உடனடியாக இன்னொருவருடைய கான் போனை வேண்டி எனது இலக்கங்களை அழுத்தினேன். என்னுடைய போன் இவனிட்ட இருக்கிறது. இவன் தான கள்ளன்... இளைஞன் கூறி முடிப்பதற்குள் அங்கு நின்ற இளைஞன் ஒருவன் கள்ளனுக்கு ஓங்கி ஒரு அறைவிட்டான். அது ஒன்றே போதும் நான் எடுக்கலயிங்க, இன்னொருவன் எடுத்து என்னிடம் தந்தானுங்க... அடுத்த அறை... எங்கேயடா அவன்... பஸ்ஸுக்குளள, அந்தப்பதிலோடு இரண்டு மூன்றுபேர் பஸ்ஸுக்குள் ஏறிப்பார்த்தார்கள்... அட, பஸ் நிற்பாட்டப்பட்டபோதே அந்தக் கள்ளர்கள் இறங்கிப் போய்விட்டார்கள்.

(வளரும்)

என். விஜயன்

# பிரதமருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுப்பது குறித்து ஐ. தே. க. ஆராய்வு

(கொழும்பு)

ஆழிப்பேரலை நிவாரண நிதி தனியார் கணக்கொன்றில் வைப்பீடு செய்யப்பட்டமை தொடர்பாக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினர் எழுப்பிய கேள்விக்கு அளித்த பதிலின் மூலம், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத்தைத் திசைதிருப்பியுளளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆழிப்பேரலை நிவாரணமாகக் கிடைத்த 80 மில்லியன் ரூபா நிதியைத் தனியார் கணக்கில் வைப்பீடு செய்தமை தொடர்பாக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினர் எழுப்பிய கேள்விக்கு அளித்த பதிலூடாக பிரதமர் பாராளுமன்றத்தின் கவனத்தைத் திசைதிருப்பியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் அனுமதியினைப் பெற்றே ஆழிப்பேரலை நிவாரணமாக பிரதமர் நிதியத்திற்கு கிடைத்த பணத்தை “ஹெப்பிங் ஹம் ஹம்பாந்தோட்ட” எனும் தனியார் கணக்கிற்கு மாற்றியதாகக் கடந்த செவ்வாய்க்கிழமை பிரதமர் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

ஏனினும் கடந்த பெப்ரவரி மாதம் இரண்டாம் திகதி பிரதமர் நிதியத்திலிருந்து தனியார் கணக்கிற்குப் பணத்தை மாற்றவதற்கு அமைச்சரவை அனுமதியைக்கோரி அவர் அமைச்சரவை அறிக்கையைச் சமர்ப்பிக்கவில்லை. பதிலாக அறிவிப்புப்பத்திரம் ஒன்றையே சமர்ப்பித்துள்ளார்.

ஏனினும் அந்த அறிவிப்புப் பத்திரத்தில் எந்தவொரு இடத்திலும் கிடைக்கப்பெற்ற நிதி “ஹெல்பிங் ஹம்பாந்தோட்டை” எனும் தனியார் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படவில்லை.

அத்துடன், பிரதமர் நிதியத்தில் எவ்வளவு பணம் உள்ளது. அதில் எவ்வளவு பணம் ஜனாதிபதி நிதியத்திற்கு மாற்றப்படுகிறது என்பது பற்றியும் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

எந்தவொரு கணக்கிற்கும் நிதியினை மாற்றுவதற்கு பிரதமர் அமைச்சரவை அனுமதியைப் பெற்றிருக்கவில்லை. ஆனால் சில விபரங்களுடன் முன்வைக்கப்பட்டிருந்ததும் ஒரு அறிவிப்பு பத்திரம் மாத்திரமே.

எவ்வாறாயினும் ராஜகிரியவிலுள்ள தனியார் வங்கியொன்றில் ஹெல்பிங் ஹம்பாந்தோட்ட எனும் இந்தத் தனியார் கணக்கு ஜனவரி மாதம் 26ஆம் திகதியே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதாவது குறித்த அமைச்சரவை அறிவிப்பதற்கு முன்னரே இந்தக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனினும் அதற்கு அடுத்து இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அந்த அறிவிப்புப்பத்திரத்தில் இதுபற்றிக் குறிப்பிடப்படவில்லை.

இதன் மூலம் பிரதமர் பாராளுமன்றத்தை பிழையாக திசைதிருப்பியுள்ளார் எனக் குற்றஞ்சாட்டப்படுகின்றது. பொறுப்புவாய்ந்த பதவியில் இருககும் ஒருவர் இவ்வாறு பாராளுமன்றத்தின் கவனத்தை திசை திருப்பியிருப்பதனால அவருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுப்பதுகுறித்து ஐக்கியதேசியக்கட்சி ஆராய்ந்து வருவதாக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (க-4)

## இலவச பயிற்சி வகுப்புக்கள்

வடமராட்சி கிழக்கில் உள்ள முன்பள்ளி தொண்டர் ஆசிரியர்களுக்கு இலவச பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டுள்ளன. கடந்த சனி, ஞாயிறு தினங்களில் மருதங்கேணியில் உள்ள பொது மண்டபத்தில் இவ்வகுப்புக்கள் இடம்பெற்றன.

தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் சிறுவர் பாதுகாப்பு நிதியமும் இணைந்து நடாத்திய இவ்வகுப்புக்கள் வடமராட்சி கிழக்கு முன்பள்ளி இணைப்பாளர் தலைமையில் இடம் பெற்றது. (க-97)

## இலவச குடிநீர் விநியோகம்

புங்குடுதீவு பிரதேசத்தில் குடிநீருக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் சென்ற ஆண்டு வேலணை பிரதேச சபையினால் வழங்கப்பட்டுவந்த இலவச குடிநீர் விநியோகம் இவ்வருட ஆரம்பத்தில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளது என வலம்புரியில் வெளியான செய்தியினையடுத்து இம்மாத ஆரம்பத்தில் இருந்து வேலணை பிரதேச சபையினால் இலவசக் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளபபட்டு வருவதையிட்டு மக்கள் வலம்புரிக்கு நன்றி தெரிவித்துள்ளனர். (அ-126)

# குழந்தைகளும் அவர்கள் பழக்கங்களும்



தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பது ஆன்றோர்வாக்கு. இதனைத் தம்பிள்ளைகளின் நல்வாழ்வு பற்றிச் சிந்திக்கும் பெற்றோரும், பாதுகாவலரும் கவனத்திற்கொள்ள வேண் டியது அவசியமாகும்.

சிறு குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல முன்புள்ளகாலம் தான் தினசரிப்பழக்க வழக்கங்களைக் கற்றுக்கொள்ளும் காலமாகும். இந்தக காலத்திலேதான் குழந்கைளில் அக்கறையுடையவர்கள் மிகவும் கவனமாகக் குழந்தைகளின நடவடிக்கைகளுக்கு பயனுள்ள நல்வழிகளைக் காட்டிக்கொடுக்க் வேண்டும். குழூந்தைள் தம் சொந்தச் சக்தியினைக் கொண்டு தமது அன்றாட வேலைகளைக் கவனிக்கும் படியாக அவர்களை வழிப்படுத்தவேண்டும்.

துழந்தைப் பருவத்திலிருந்தே படிப்படியாக மெதுவாகவும், அன்றாடப் பழக்கங்களில் பயிற்சியளித்தல் வேண்டும். அவர்களது அறயும் ஆற்றலுக்குத் தக்கபடி அவசரபபடாமலும், கோபப்படாமலும், பொறுமையாக வழிப்படுத்தி வருவோமானால் குழந்தைகள் தம் எதிர்காலத்தில் வாழ்க்கையில் எதனையும் பக்குவமாகப் பழக்கப்படுத்திவிடலாம்.

துழந்தைகள் சிறுவயுதிலேயே சத்துணவைச சாப்பிடவும் உணவ!ல் சில ஒழுங்குமுறைகளைக் கையாளவும் சிறுசிறு உடற்பயிற்சிகளையும், ஓய்வு நேரங்களில் சிறார்களுடன் சேர்ந்து விளையாடவும் பழக்கப்படவேண்டும்.

துழந்கைளுக்கு வார்த்கைள் கொண்டு கற்பிப்பதை விட நேரில் செய்து காட்டுவதும், மற்றவர்களுடன் சேர்ந்து பழகும் போது ஏற்படும பழக்க வழககங்களுமே எளிதிற் பதிந்துவிடும். எனவே இந்தவிடயத்தில் அவர்களுடன் மிகவும் கவனமாக, பக்குவமாக செயல்படவேண்டியது பெரியோரின் கடமையாகும்.

துழந்தைகளின் வளர்ச்சிக்கேற்ப தூக்கமும், போசாக்கான உணவும், உடற்பயிற்சியும், ஒழுங்கான பழக்கவழக்கங்களும் கவனிக்கப்படவேண்டும். சேர்ந்து பழகும் சிறுவர்களின் நல்ல பழக்க வழக்கங்கள் செயற்பாடுளை ஊக்கப்படுத்துவதும், பழையான வழிகளைப் பக்குவமாக உறுக்கித திருந்த வழிசெய்வதும் பெரியோர்கடமையாகும். சின்னஞ்சிறுசுகளின் பிஞ்சுமனங்கள் நோகும் படி கண்டிப்பதோ, அடித்து அச்சுறுத்துவதோ தவறாகும்.

குழந்தைகட்கு மிகவும் இளம்பராயத்திலிருந்தே நல்லது எது? கெட்டது எது என்று அறியும் பழக்கம் வளர்ந்தால் அது நாட்டுக்கும் நன்மை பயக்தும். சறுவர்கள் இயல்பாகவே மற்றவர்களைக கவனித்து மற்றவர்கள் செய்வதையே தாமும் செய்ய முயல்வார்கள்.

ஆகவே அடக்கத்தையும், நன்னடத்தைகளையும் முதலிற் பெற்றோர் கைக்கொளவாராயின் பிள்ளைகளும் அதனைப் பின்பற்றி நல்வழி நடத்தல் இலகுவாகும்.

*நீர்வை மணி*

# ஐ.என்.எஸ்.தல்வார்!

இந்திய போர்க்கப்பல்களின் தளபதி என்று அழைக்கப்படுபவர் யார் தெரியுமா? ஐ.என்.எஸ. தல்வார், ஏவுகணைகளை எதிர்த்து அழிக்கும் திறனும் நீர் மூழ்கிக் கப்பல்களைக் கண்டால் அவற்றை அழிக்கும் திறனும் கொணடது இது. புகை போக்கியிலிருந்து வரும் புகையை மோப்பம் படித்து தாக்கும். எதிரி ஏவுகணைக்கு, வழியில்லாமல் தடுத்துக்கொள்ளும் வசதியும் கொணடது. இக்கப்பலில் காநத அலைகளோ, அகச் சிவப்பு கதிர்களோ, அதிர்வுகளோ கசியாது. இதனால் எதிரி ராடார் கருவியால் இக்கப்பலை தொடர முடியாது. இதன் விலை ரூ. 1,500 கோடிதான்!

# டயனோசர் உணவாக உட்கொண்ட மரபெரோணி மரம்

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் டயனோசர் உணவாக உட்கொண்ட மரபெரோண' மரம் இந்தியாவில் தற்போது வளர்க்கப்பட்டு வருகிறது. மரபெரோணி எனனும் ஒரு வகை மரம் வனப் பகுதிகளில் மட்டுமே வளரக் கூடியது. இத்தகைய மரங்களில் 15 வகைகள் உள்ளன.

இதில் சில வகை மரபெரோணி மரங்களின் இலைகளில் முள் இருக்கும். சில வகை மரங்கள் குட்டையாகக் காணப்படும். ஆனால் ஒருவகை மரபெரோணி இலை மட்டம மெதுவாகவும், இளஞ்சிவப்பு நிறத்தில் பார்ப்பதற்கு அழகாகவும் இருக்கும். இத்தகைய மரபெரோணி மரங்கள் தமிழ் நாட்டில் கொடைக்கானல், செண்பகனூரில் உள்ள திரு இருதயக் கல்லூரித் தோட்ட வளாகத்தில் வளர்க்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகன்றன.

பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன் டயனோசா என்ற காட்டு மிருகம் வாழ்ந்துவந்ததாகக் கூறப்படுகிறது. அந்த மிருகத்திற்கு மிகவும் பிடிததமான உணவாக இந்த மரபெரோணி மர இலைகள் இருந்திருக்கின்றது என அறிவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# டிஜிற்றல் முறையில் படக்காட்சி திரைப்பட உலகில் மாபெரும் புரட்சி

புதிதாக வெளிவரும் திரைப்படங்களுக்கு திருட்டு வி.சி.டி பெருத்த பாதிபபை ஏற்படுத்தி வரும் நிலையில் திருட்டு வி.சி.டி எடுக்க முடியாத விதத்தில் படத்தை தயாரிப்பதில் மேற்கொள்ளப்பட்டுவரும் தொழில் நுட்பம் திரைப்படத்தயாரிப்பாளர்கள் மத்தியில் பெரும் ஆறுதலை ஏற்படுத்தியுள்ளது.

பெரிய பெரிய தகரப் பெட்டிகள் அதற்குள் வைக்கப்பட்டிருக்கும் பிலிம் சுருள்கள். இந்தப் படச்சுருள்களைப் பெற்றுத் திரை அரங்குகளில ஒப்பரேட்டர்கள் படத்தை ஓட்டுவது தான் இப்போதுள்ள வழக்கம்.

இதற்குப் பதிலாக மொத்தப்படத்தையும டிஜிற்றல் முறையில் பதிவு செய்து கம்யூட்டர் உதவியுடன் படத்தை ஓட விடுவதே புரட்சியை ஏற்படுத்தப் போகும் புதியமுறை.

தயாரிக்கப்பட்ட ஒரு படத்தின் பிலிமை வைத்து ஒரு பிறிண்ட் போட 70ஆயிரம் ரூபா செலவானால் டிஜிற்றல் முறையில் பிரதியெடுக்க 10ஆயிரம் ரூபாதான் தேவைப்படுகிறது. இதனால் சினிமா தயாரிப்புச் செலவுகள் பெருமளவு மிச்சப்படுகின்றது. திரையரங்குகளுக்கும் டிஜிற்றல் முறையால் சில நன்மைகள் இருப்பதாக அரங்கு உரிமையாளர்கள் கூறுகிறார்கள்.

சென்னையில் சில திரையரங்குகள் உட்படத தமிழகம் முழுவதும் 75 அரங்குகளில் டிஜிற்றல் முறைக்கு மாற்றும் பணிகள் நடைபெறுகின்றன.

இதைத் தவிர, டிஜிற்றல் முறையல்ல ஓட்டப்படங்களிலிருந்து திருட்டு வி.சி.டி எடுக்க முடியாது என்பது தான் கூடுதல் சிறப்பு.

உயர்ந்த வைராக்கியத்தில் வெற்றி பெற்றவர்கள் வாழ்க்கையில் எதிலும் தோல்வி என்பதே ஏற்படாது.

-ஓர் அறிஞர்.

# இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல. 66

## படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?

'அக்ஷன்' ஹீரோவான இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிவரும 19 ஆம திகதிககு முனனர் கிடைககக் கூடியதாக அனுபபிவைக்கவும்.



நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 66**
**வலம்புரி ~ சங்குநாதம**
**இல.03, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம.**

குறிப்பு:-

சரியான விடை எழுதுபவர்களில மூன்று போட்டியாளாகளுககு குலுககல முறைமூலம தெரிவு செய்யபபட்டு பரிசு வழஙகப்படும்.

பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணததினை 'வலம்புரி' காரியாலயததில் பெற்றுக்கொள்ளவும.

**இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:-66**

படத்தில் உள்ளவரின் பெயர் :-........................

அனுப்புபவரின் முழுப்பெயர் :-........................

அனுப்புபவரின் முகவரி :-........................

........................

........................

**இவரைத்தெரியுமா? பரிசுப்போட்டி இல - 64**

**சரியான விடை**





**நடிகை சோனியா அகர்வால்**

**இவரைத் தெரியுமா பரிசுப்போடடி இல. 64இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம**

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :~ | மா.கரன், சுதுமலை தெற்கு, மானிப்பாய். |
| இரணடாம் பரிசு | :~ | M.மாதுரி, உடுவில் கிழக்கு, இணுவில். |
| மூன்றாம் பரிசு | :~ | ஏ.வாசவி, இல.620, நாவலர் வீதி, அரியாலை. |

**சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்**

S.பாக்கியநாதன், வட்டுக்கோட்டை. வி.இளங்கோ, கோப்பாய், சி.கோவிந்தராஜன், யாழ்ப்பாணம். வே.குமராசுவாமி, கரவெட்டி. சு.விதுஷன், வண்ணார்பண்ணை. சொ.நித்தியா, கொக்குவில். லோ.அபிராமி, வல்வெட்டி. து.நக்கீரன், மல்லாகம். P.பவானி, கொக்குவில். கை.தாரணி, கைதடி. க.கைலாசம், இணுவில். க.குகாயினி, கைதடி. கு.நிரோஜன், சண்டிலிப்பாய். த.பிரதீபன், பருத்தித்துறை. L.கீர்த்திகா, உடுப்பிட்டி. லோ.சுவஸ்திகா, யாழ்ப்பாணம். மா.மதுஷன், நாவாந்துறை. வ.நிசாந்தன், காரைநகர். ஆ.நிஜந்தினி, வடமராட்சி. வி.நந்துஜா, வண்ணார்பண்ணை. ச.திவ்வியசசி, சித்தன்கேணி. இ.ராஜன், வடமராட்சி. L.விஜி, உடுப்பிட்டி. வே.சுாபஷினி, மானிப்பாய். ந.கோபிகா, சுழபுரம். K.புஸ்பராணி, தம்பசிட்டி. கு.முரளி, சாவகச்சேரி. வ.இராஜேஸ்வரி, யாழ்ப்பாணம். கை.சுகீதா, மல்லாகம். மா.மகிந்தன், சண்டிலிப்பாய். நா.சாம்பவி, மிருசுவில். க.செல்வன், மட்டுவில். வே.தனுஷன், நயனாதீவு. க.தரணி, சுன்னாகம். இ.வினோ, இணுவில். நி.சுரேக்கா. கோண்டாவில். ம.ஜனா, இணுவில். ச.சர்மினி, ஊர்காவற்றுறை. ம.கேதாரம், வேலணை. க.பிரித்வி, உரும்பிராய். கி.சாரங்கா, சண்டிலிப்பாய். ச.துவாரகா, இணுவில்.

# மரணத்தின் நிழலில்

## மீள் பார்வை — சதாம் கதை

### பிடிபட்ட பிறகு... பிறந்த மண்ணில்!




*மௌனம் கனக்கும் இரவு.*
*முதுகுத்தண்டு சில்லிடும் குளிர்.*
*மேலே பாலைநில வானம்.*

கீழே, வெள்ளிமலையை உருக்கி இருட்டுக்குள் கொட் டின மாதிரி மங்கலாய்த் தெரியும் நதி. ஆதிகாலம் தொட்டு மனித நாகரிகங்களையும், அநாகரிகங்களையும் பார்த்து சலித்த களைப்பில் மெதுவாய் ஓடும் டைக்ரீஸ் நதி. நதிக் கரையில், திடீரென முளைக்கும் மின்மினிப்பூச்சிகளின் வெளிச்சங்கள். கூடவே ஒரே தாளகதியில் கேட்கும் இனம புரியாத சத்தம்.

நிமிடங்கள் கரைய, வெளிச்சங்கள் விளக்குகளாய் விரிந் தன. அந்த சத்தமும் நடுக்கமூட்டும் ஆதிக்கக்காரர்களின் பெரும் குரல் போல் பேரி ரைச்சலாய் அதிகரித்தது. அட... அமெரிக்க இராணுவ வாகனங்கள் ... வரிசையாய்... இருளைக் கிழித்துக்கொண்டு... தலைமறைவாக இருக்கும் சதாம் உசேனைப் பிடிப்ப தற்காக இந்த வாகனங்கள் கடந்த சில நாட்களாக வேட்டை நாய்க்கு வெறி பிடித்த மாதிரி, இப் பகுதியில் சுற்றித் திரிகின்றன. இப்போது ஒரு மாற்றம், அவர்கள் தேடிய சதாம் உசேன் இதோ... அவர்களின் வாகனத்தில். நரைத்த தாடியும் பரட்டைத் தலையுமாய் அழுக்கு ஆடையுடன் அமர்ந்திருக்கும் அவருக்கு காவலாய் அருகில் துப்பாக்கி ஏந்திய அமெரிக்க இராணுவத்தினர்.

வாகனங்கள் வழக்கத்தை விட வேகமாய் சிட்டாய்ப் பறப்பதற்கு இதுதான் காரணம்.

மங்கலாய் தெரியும் டைக்ரீஸ் நதியின் நீரோட்டத்தின் மேல் சதாமின் பார்வை இருந்தது. ஆனால் அவரது மனஓட்டம் நதிமேல் இல்லை என்பதை முகம் காட்டியது.

நெரித்த புருவங்கள். தவிக்கும் கண்கள். தாடியை அடிக்கடி நீவும் விரல்கள்.

கடந்துபோன சில மணித்துளிகளில் தனக்கு என்ன நேர்ந்தது என்பதை நினைவுக்குக் கொண்டு வர சதாம் முயன்று கொண்டிருந்தார்.

பகல் முழுக்க எச்சரிக்கையுடன் இடம்பெயர்ந்து விட்டு, அட்வர் நகரத்துக்கு வெளியே ஒற்றை வீடாய் இருக்கும் பண்ணைவீட்டுக்கு இரவில் திரும்பியது அவரது நினைவுக்கு வருகிறது. உதவியாளர்கள் இருவர் பணிவிடை செய்ய, அங்கு உணவருந்தியது நினைவுக்கு வருகிறது. தன்னைப் பிடிக்க அமெரிக்கப் படையும், துப்பு சேகரிக்க குர்து விடுதலைப் படை யும் தீவிரமாக இருப்பதைத் தெரிந்து வைத்திருந்ததால் முன்னெச்சரிக்கையுடன் அந்த வீட்டிலுள்ள பதுங்குகுழிக்குள் இறங்கியது நினைவுக்கு வருகிறது. தான் இறங்கிய பிறகு, உதவியாளர்கள் பூந்தொட்டி வடிவ மூடியால் பதுங்குகுழியை கச்சிதமாய் மூடியது நினை வுக்கு வருகிறது. குழிக்குள் இருந்த புழுக்கத்தை விரட்ட மின்விசிறியை சுழலவிட்டது நினை வுக்கு வருகிறது. அசம்பாவிதம் நேர்ந்தால் ஆயுதப்பிரயோகம் செய்து தப்பிச் செல்ல வச தியாக துப்பாக்கியை வாகாக வைத்துக்கொண்டு கண்மூடியது நினைவுக்கு வருகிறது.

அதற்குப் பிறகு...?

அமெரிக்க இராணுவத்தின் பிடியில் தான் இருப்பது நினைவுக்கு வருகிறது.

இடையில் என்ன நடந்தது?

சதாம் தீவிரமாக யோசித்தார். மனசில் அலைபாயும் கேள்விகள் நெற்றிச் சுருக்கங்களில் தெரிந்தன.

எப்படிப் பிடித்தார்கள்? பதுங்குகுழியின் மூடியைத் திறந்து அதன் வழியாக... அல்லது பதுங்குகுழிக்கான காற்றுக்குழாயைக் கண்டுபிடித்து அதன் வழியாக மயக்க வாயுவை செலுத்தி என்னை செயலிழக்கச் செய்து பிடித்தார்களா? அல்லது அவர்களை எதிர்க்க மன மின்றி என்னை நானே அவர்களிடம் ஒப்புவித்துவிட்டேனா? இதில் எது நடந்தது? அது ஏன் நினைவுக்கு வரவில்லை? நான் அதிர்ச்சியில் இருந்ததாலா? மயக்கத்தில் இருந்ததாலா?

கேள்விக்கு விடையாக கேள்வி தான் பிறந்தது. தெளிவான விடை கிடைக்கவில்லை.

மனச்சோர்வில் கேள்விகளை ஒதுக்கித் தள்ளியபோது அவரது பார்வை பதிந்திருந்த நதியில் நீரோட்டம் கண்களுக்கு புலப்பட்டது.

கரைகளைத் தழுவி, பாறைகளை அறைந்து, கோடு கிழித்த மாதிரி நேராக ஓடிக் கொண்டிருக்கும் டைக்ரீஸ், எதிரில் குறுக்கே நிற்கும் பெரிய மேட்டு நிலத்தை மோதிக் கரைத்து கடக்க இயலாமல் தொண்ணூறு டிகிரி நெடுஞ்சாண் கிடையாக வளைந்து அந்த மேட்டு நிலத்தை சுற்றி பயணிப்பது அவரது பார்வையில் பட்டது.

எதிர்த்து வெற்றி பெற முடியாது என்று தெரிந்தால் நதியும் நாணலும் நாசூக்காக வளைந்து கொடுத்துப் போய்விடுகின்றன. வளைந்து கொடுப்பது கோழைத்தனமா? ராஜதந்திரமா?

வளைந்து கொர்டுக்க மறுத்து, வெற்றி-தோல்வி பற்றிக் கவலைப்படாமல் மன உறுதியு டன் இறுதிவரை எதிர்த்து நின்றால் அது வீரமா? அசட்டுத் துணிச்சலா?

நான் வீரனா? அசட்டுத் துணிச்சல்காரனா?

மீண்டும் கேள்விச் சூழலில் சிக்கி மீளமுடியாமல் தவித்தார் சதாம். திடீரென சற்று பின் னால் சரிந்தார்.

வாகனம் அந்த மேட்டுநிலத்தில் ஏறத் தொடங்கியிருந்தது... சட்டென நிமிர்ந்து தன்னை வசதியாக இருத்திக் கொண்ட சதாம் எதிரே பார்த்தார். துணுக்குற்றார்.

வாகனம் வீசியெறிந்த வெளிச்சத்தில் அந்த ஊர் தெரிந்தது. மேட்டுநிலத்தின் மேல், சாலையின் வலது புறம் அது இருந்தது.

சதாமின் முகம் வெறுப்பில் இறுகியது. அந்த ஊரை பார்க்கப் பிடிக்காதவர் போல் அருவருப்புடன் பார்வையை எதிர்ப்பக்கம் திருப்பிக்கொண்டார். இது அவரது வழக்கம்.

அதிபராய் அரசோச்சிய காலத்திலும் இப்படித்தான். அந்த மேட்டுநிலத்தை கடக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்ட பொழுதெல்லாம் அந்த ஊரைப் பார்க்க பிடிக்காமல் முகத்தை எதிர்த்திசையில் திருப்பிக் கொள்வார்.

அதிபரின் வெறுப்புக்கு ஆளான அந்த ஊர், சீர்செய்ய முடியாத அளவுக்கு சீரழிந்து கொண்டிருக்கும் பெரு நகரம் அல்ல. ரொம்ப சின்னக் கிராமம். மிஞ்சிப் போனால் நூறு வீடு கள் இருக்கும். செல்வச் செழிப்போ ஆடம்பரமோ அண்டாமல் ஏழ்மை தாண்டவமாடும் எளிய வீடுகள். பெரும்பாலான மண்குடிசைகள் இடிந்த நிலையில் இருக்கின்றன. எஞ்சிய ஒரு சில காரை வீடுகளும் அழுக்குப்பிடித்துக் கிடக்கின்றன. ஆள்நடமாட்டம் கூட அவ்வளவாக இல் லாத அந்தக் கிராமத்தில், குப்பையாய் கிடக்கும் சந்துகளில் ஒன்றிரண்டு சொறிநாய்கள் ஓடித்திரியும். பலத்த சத்தம் கேட்டால் பதறிப் போய் எகிறிக் குதிக்கும்.

அந்தக் கிராமத்தில் வசிக்கும் அனைவரும் சதாமின் சண்டைக்காரர்கள் அல்ல; சொந்தக்காரர்கள். ஆம். அதுதான் சதாம் பிறந்த ஊர்.

சுத்துப்பட்டிக்காரர்களைத் தவிர வெளியில் வேறு யாருக்கும் தெரியாமல் இருந்த அந்தக் குக்கிராமத்தில் தான் சதாம் 1937ஆம் ஆண்டு ஏப்ரல் 28ஆம் திகதி பிறந்தார்.

பிழைப்புக்காக எந்த சீமைக்குப் போயிருந்தாலும், சொந்த ஊரை-அது எத்தனை மோசமானதாக இருந்தாலும் -நேசத்துடன் நெஞ்சில் சுமப்பது மனித இயல்பு. ஆனால் சதாம் இதற்கு விதிவிலக்காக இருந்தார். சொந்த ஊரை ஜார்ஜ் புஷ்ஷுக்கு இணையாக வைத்து அவர் வெறுத்தார். அதற்குக் காரணம் இருந்தது.

'என் பிறப்பு ஒரு மகிழ்ச்சியான சம்பவமாக இருக்கவில்லை. என் தொட்டில் ரோஜாக் களாலும் நறுமணம் பரப்பும் மூலிகைகளாலும் நிரப்பப்பட்டதில்லை' என்று சதாம் பின்னாளில் வருத்தத்துடன் நினைவு கூர்ந்திருக்கிறார்.

நன்றி :-நக்கீரன்

(தொடரும்)

## திருமலையில்...



லெப் .கேணல் டிக்கான் உட்பட நால்வர் படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து நேற்று திருமலையில் இடம்பெற்ற கதவடைப்பில் இருந்து...



மக்கள் அஞ்சலிக்காக நேற்று முன்தினம் வித்துடல்கள் வீதி வழியாக எடுத்துச் செல்லப்படுகின்றன.




முற்றவெளியில் இருந்து தரை மார்க்கமாக நேற்று முன்தினம் செஞ்சிலுவைச் சங்கத்தின் வழித்துணையுடன் சம்பூருக்கு வித்துடல்கள் எடுத்துச் செல்லப்படுகையில்...



லெப்.கேணல் டிக்கானின் வித்துடல் அடங்கிய பேழை...

## அருள் அமுதம் வெளியீட்டு விழா

நெல்லியடி தடங்கள் புளியடி முருகமூர்த்தி ஆலயத் திருப்பணி நிதிக்கென ஆசிரியர் க. இராஜரத்தினத்தினால் தொகுத்து எழுதப்பட்ட "அருள்அமுதம்" தோத்திரமாலை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.00மணிக்கு நெல்லியடி முருகன் திரு மண மண்டபத்தில் ஆசிரியர் ஆ.சிவநாதன் தலைமையில் இடம் பெறவுள் ளது.

பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் சி. சத்தியசீலன் கலந்து கொள்ளவுள்ளார். நூல் வெளியீட்டுவிழா பஜனை, திருமுறைஓதல் என்பவற்றுடன் ஆரம்பமாகும். நிகழ்வில் வரவேற்புரையை கரணவாய் மகாவித்தியாலய அதிபர் சி. நற்குணசிங்கமும் ஆசியுரைகளை சிறீலசிறீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தபரமாசசாரிய சுவாமிகள், சுவாமி சித்ருபானந்தா பிரம்மசிறி சுப்பிரமணிய கௌரிபாலக்குருக்கள் ஆகியோரும் நிகழ்ந்துவார்.

வாழ்த்துரையை பேராசிரியர் கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர்,இந்து கலாசார திணைக்கள உதவிப்பணிப்பாளர் சிவமகாலிங்கம்,வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராஜா ஆகியோர் வழங்குவார். வெளியீட்டுரையைத் தொடர்ந்து தேவரா இசை மணி கலாபூசணம் தாவடியூர் சிவததிரு கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தனின் பண்ணிசைக்கச்சேரி இடம்பெறும்.(க-101)

# லீஷ்மானியாசிஸ் - ஒருவித ஒட்டுண்ணி நோய்

இன்று பலரால் உச்சரிக்கப படும் பெயர் 'லீஷ்மானியாசிஸ்' இது ஒரு ஒட்டுண்ணி நோயாகும். தற்போதுதான் பலராலும் பரவலாக உச்சரிக்கப்பட்டாலும் இது இலங்கைக்குப் பழையது. முதன் முதலில் 1992ஆம் ஆண்டு அம்பலாந்தோட்டைப்பகுதியில் இந்நோய் தொற்றியவர் கண்டறியப்பட்டார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் அண்மைக்காலங்களில் இந்



நோய் தொற்றிய கிட்டத்தட்ட 10ற்கும் மேற்பட்டோர் ஆய்வுகூடப் பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர். எனினும் 'தரவுகளுக்கு அப்பாற்பட்டு பலர் இந் நோயினால் தாக்கமடைந்திருக்கலாம் எனவும் அஞ்சப்படுகின்றது.

லீஷ்மானியாசிஸ் பற்றிய தற்போதைய விழிப்புக்குக் காரணம் உலக சுகாதார ஸ்தாபனத்தினர் இந்நோயின் தாக்கத்தின் தன்மை பற்றி அறிவதற்கு யாழ்ப்பாணத்திலே ஆயத்தமாகி இருக்கின்றமையேயாகும்.

முதற்கட்டமாக இந்நோய்க் காவியான மணல இலையான் (Sand fly) கூடுதலாகக் காணப்படுவதாக கருதப்படும் நெடுந்தீவுப் பகுதியில் தமது ஆய்வினை இவ் வாரம் ஆரம்பித்திருக்கின்றார்கள்.

இந்நோய் பற்றிய தெளிவான விளக்கம் அண்மையில் நடந்த யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட கண்காட்சியில் தரப்பட்டது. எனினும் இதுபற்றி எத்தனை பேர் விழிபபடைந்தார்கள் என்பது விடையில்லா வினாவாகும்.

## இந்நோயின் தாக்கப் பதிவுகள்

இலங்கையிலே 1992ற்குப் பின்பு நூற்றுக்கும் மேற்பட்டோர் இனங்காணப்பட்டுள்ளனர். அத்துடன் இத்தொகை வருடா வருடம் மேலும் மடங்குகளாக அதிகரித்துச் செல்வதாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. உலக சுகாதார ஸ்தாபன 1990ஆம் ஆண்டு தரவுகளுக்கு அமைய உலகிலே 12 மில்லியன் மக்கள் கிட்டத்தட்ட 82 நாடுகளில் இவ் ஒட்டுண்ணித் தொற்றுக்கு உள்ளாகி இருக்கின்றார்கள். சுமார 2 மில்லியன் மக்கள் ஒவ்வொரு வருடமும் மேலதிகமாக தொற்றுக்கு உள்ளாகி வருகின்றார்கள். 350 மில்லியன் மக்கள் தொற்று ஏற்படக்கூடிய அபாயத்தினை எதிர் நோக்கியவர்களாக உள்ளார்கள்.

## நோயின் புவியியல் பரம்பல்

தெற்கு, மத்திய அமெரிக்கா, மேற்காசியா, மத்தியகிழக்கு நாடுகள் மற்றும் அதிகளவில் எமது அண்டை நாடுகளான இந்தியா, நேபாளம், பங்களாதேஷ் மற்றும் பிறேசில், சூடான் ஆகிய நாடுகள் நோய்த்தாக்கம் கூடிய நாடுகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

## லீஷ்மானியாசிஸ் என்றால் என்ன?

இது Leishmania எனும் சாதியைச் சேர்ந்த ஒரு கல அங்கியான (Protozoa) புரட்டசோவா ஒட்டுண்ணியால் ஏற்படும் ஒட்டுண்ணி நோயாகும். இந்நோயினை கிட்டத்தட்ட மலேரியா நோயுடன் ஒப்பிடுவதன மூலம் இலகுவில் விளங்கிக் கொள்ளலாம்.

மலேரியாவும் லீஷ்மானியாசிஸ் உம ஒரு புரட்டசோவா (Protozoa) ஒட்டுண்ணியால் ஏற்படுகின்ற குருதிச் சுற்றோட்டத் தொகுதி சம்பந்தப்பட்ட ஒட்டுண்ணி நோய்களாகும். இவ்விரு நோயகளும் ஒருவருக்கொருவர் காவிகள் மூலம் கடத்தப்படக்கூடியன. மலேரியா



வைக் கடத்துவது அனோபிலிஸ் வகையைச் சேர்ந்த பெண் நுளம்பு. லீஷ்மானியாசிஸ் ஐக் கடத்துவது நுளம்பினை ஒத்த இலையான் வகையான பெண் மணல் இலையான். (Sand fly) எனப்படும் சிறு அங்கி.


## லீஷ்மானியாசிஸ் நோய்க் காரணி

நோய்க்காரணி ஒரு Protozoa ஒரு கல அங்கி வகையைச் சார்ந்தது. மிகச் சிறியது. வெற்றுக் கணணால் பார்க்கமுடியாது. நுணுக்குக் காட்டிக்குரியது. Leishmania எனும் சாதியை (Genus) சேர்ந்தது. பல இனங்களை (Spe cies) ஐ உடையது. இனங்களுக்கு ஏறப மனிதால் பிரதானமான மூன்று வகையான நோய்த் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.

(1) உள்ளங்கங்களில் ஏற்படுத்தப்படும் லீஷ்மானியாசிஸ் (Viceral Leishmaniasis or Kala-Azar) (உ+ம்) ஈரல், மண்ணீரல், என்புமச்சை போன்ற அங்கங்களை பாதிக்கும். இதனை பிரதானமாக *Leishmania donovani* எனும் வகை அங்கி ஏற்படுத்துகின்றது.

02) தோல் மேற்பரப்பில் ஏற்படும லீஷமானியாசிஸ் (Cutaneovs Leishmaniasis) *Leishmania Tropica* மற்றும் *Leishmania major* வகை அங்கிகள் ஏற்படுத்துகின்றன. இது தோல் மேற்பரப்புகளுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டது.

03) சீத-தோல் மேற்பரப்பு லீஷ்மானியாசிஸ் (Muco-cutaneovs leishmaniasis) இது மிகவும் அரிதானது. சீதப்படை மற்றும் தோற்படை சந்திப்புகள் எற்படும் மூக்கு, வாய்க்குழி போன்ற இடங்களில் ஏற்படுவது *Leishmania brazilli*



*ensis* எனும் வகை அங்கி பிரதானமாக ஏற்படுத்துகின்றது.

Leishmania அங்கியானது இயற்க்கையில் பிரதானமாக பாலூட்டி விலங்குகளை தம் வாழ்விடமாகக் கொண்டிருக்கின்றன. தற்போது Leishmania வின் வாழ்விடங்கள் சரியாக வரையறுககப் படவில்லை. எனினும் பிரதானமாக மனிதன் மற்றும் வளர்ப்பு மிருகமான நாய்களில் இவை வாழ்வதாகக் கூறப்படுகின்றது.

## நோய்க்காவி

மனிதருக்கு-மனிதரும் மற்றும் பாலூடடிகளிடையே நோய்க்காரணியான Leishmania அங்கியைப் பரப்புவது Sand fly எனப்படும் மணல் இலையான். இதில் பல இனங்கள் இருப்பினும் இலங்கை, இந்தியாவில் பெருமளவில் உள்ள இனம் *Phlebotomvs Agentip es* எனும் விஞ்ஞானப் பெயரையுடைய அங்கியாகும். இங்கும் பெண் மணல் இலையான் தான் நோய்க்காவியாக உள்ளது.

இது மிகவும் சிறியது. சராசரி நுளம்பின் 1/3 பங்கு சிறியது. கிட்டத்தட்ட 1-3mm ஆனது. வெற்றுக் கண்ணுக்குப் புலப்படக் கூடியது. இதனது இயல்புகளை நோக்குமிடத்து இது பறக்கும் போது நுளமபுகளைப் போல சத்தத்தை ஏற்படுத்தாது. இவற்றினது வருகையை இலகுவில் உணரமுடியாது. வெப்பமான பகல் பொழுதுகளில் ஒப்பீட்டளவில் மிகக் குறைநதளவு செயல்திறன் கொண்டவை. மரங்களில் இலைகளுக்குக் கீழ் மற்றும் ஒதுக்குப் புறங்களில் மறைந்திருக்கும். இம்மறைவிடங்கள் மனிதனால் அகற்றப்ப்டும் போது பகல் வேளைகளிலும் தாக்கக் கூடியவை.


பெரும்பாலும் மாலைப் பொழுதுகள், இரவுகளில் கூடுதலாக மனிதரை குருதி உணவுக்காக இவை நாடுகின்றன. நுளம்புகள் எமது உடுப்புக்களைத் தாண்டி எம்மைக் குத்தக்கூடியவை. ஆனால் இவ் மணல் இலையான் உடுப்புக்களின் ஊடாக குத்தமுடியாதவை. எனவே உடுப்புக்களால் மூடப்படாது வெளிக் காட்டப்படும் முகம், கை, காதுப் பகுதிகளினையே இவை தாக்கிப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

நெடுந்தீவிலே முருகைக் கற்களாலேயே வேலிகள் அமைத்திருப்பார்கள். இவை நீரை உறுஞ்சி குளிர்ச்சியான சூழலையும் மறைவான ஒதுக்குப்புறங்களையும் வழஙகுவதால் மணல் இலையான்களின் இனப்பெருக்க நிகழ்விற்கு ஏதுவாக அமைகின்றது. எனவே நெடுந்தீவிலே இந் நோய்க் காவியான மணல் இலையான்கள் அதிகளவில் உள்ளன. இவை பெரும்பாலும் கிராமப்புறங்களிலேயே அதிகளவில் காணப்படுகின்றன.

நெடுநதீவிலே இம் மணல் இலையான்கள் அளவில் கூடவாக உள்ளதாக அறியப்படுகின்றது. அதேபோல (Leishmania) நோய் தாக்கமடைந்தவர்கள் பலர் அடையாளப்படுத்தப்படாமல் இருக்கலாம் என்ற அடிப்படையிலேயே தற்போது உலக சுகாதார ஸ்தாபனத்தினர் நெடுந்தீவில் இருந்து தமது ஆய்வினை ஆரம்பிக்கின்றார்கள்.

## உள் அங்கங்களைப் பாதிக்கும் லீஷ்மானியாசிஸ் (Viceral leishmaniasis)

இது ஒரு உயிராபத்தான வகை



யாகும். இந்நோய் அறிகுறிகளுடன் இதுவரை இலங்கையில் எவரும் இனங்கண்டு உறுதிப்படுத்தப் படவில்லை. எனினும் இல்லை என்று கூறமுடியாது. மேலும் இந் நோய் வகையை ஏற்படுத்தும் *L.donovani* வகை ஒட்டுண்ணியானது இலங்கையில் தோல் மேற்பரப்பு லீஷ்மானியா நோய்த்தாக்கத்தை உடையவர்களிடம் இருப்பது உலகிலேயே முதல் முதலில் இங்கு ஆய்வுகூட ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பெரும்பாலான தொற்றுக்கள் அறிகுறிகள் அற்றவை. 3வீதமானவர்கள் மட்டுமே சரியான நோய் அறிகுறிகளை வெளிப்படுத்துகிறார்கள். இதன் நோயரும்பு காலம் 2-6 மாதங்களாகும். எனினும் இது 10 நாட்கள் தொடங்கி 2வருடம் வரை வேறுபடலாம்.


நோய் அறிகுறிகள் காய்ச்சலுடன் ஆரம்பமாகும். காய்ச்சல் தொடர்ச்சியாக அல்லது ஒழுங்கற்று நீண்டகாலம் காணப்படும். தோல் காயந்து கரடு முரடாக மாறுவதுடன் கருமை நிறமாகும்.

இறுதியாக மண்ணீரல், ஈரல் என்பன அளவில் பெருக்கும். splenomegaly, hepatomegaly) மற்றும் நிணநீர் மூச்சு வீக்கமும் (Lymphadenopathy) காணப்படலாம். மற்றும் குருதிச் சோகை மற்றும் முரசில் குருதி வடிதல் என்பனவும் காணப்படும்.

நோயாளி தகுந்த மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தப்படாவிட்டால் 1-2 வருடங்களில மரணமடையும் வாய்ப்புள்ளது.

## தோல் மேற்பரப்பில் ஏற்படும் லீஷ்மானியாசிஸ் (Cutaneovs leishmaniasis)

இலங்கையிலே இதுவரை இவ் வகையான லீஷ்மானியாசிஸ் தான் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. எமது யாழ்.போதனா வைத்தியசாலையிலும் இந்நோய்த் தாக்




கமடைந்த பலர் ஆய்வுகூடப் பரிசோதனைமூலம் உறுதிப்படுத்தப் பட்டுள்ளார்கள். இவர்கள் பெரும்பாலும் முல்லைத்தீவு, இராமநாதபுரம், வட்டககச்சி மற்றும் வவுனியா போன்ற இடங்களைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். தோலில் ஏற்படும் சிறு ஆறாத புண் நீண்ட காலமாக, மாதக்கணக்கில் காணப்படும். பொதுவாக வெளிக்காட்டப்படும் முகம், கை, காதுப் பகுதிகளிலே காணப்படலாம்.

வழமையாக ஒன்று அல்லது பல காயங்கள் தோலில் ஏற்படும. சிறிய வட்டவடிவமான மேலெழுந்த தழும்புகளாக (Papvles) அல்லது தோலில் சிறிய வட்டவடிவ கட்டிகளாக ஆரம்பமாகும். காயத்தின் அளவு, தோற்றம் காலத்திற்குக் காலம் மாற்றமடையலாம். காயத்தினை விபரிக்கையில் வட்டவடிவ உயர்வான விளிம்பினை உடைய நடுப்பகுதியில் தாழி வடிவமான எரிமலை போன்றதாக இருக்கும் என வர்ணிக்கப்படுகிறது. காயத்திற்கு அண்மையில் உள்ள நிணநீர் முடிச்சுகள் சில வேளைகளில் வீக்கமடைந்து காணப்படலாம்.

## சீதப்படை மேற்பரப்பு லீஷ்மானியாசிஸ்

மிக அரிதானது. மத்திய, தென் அமெரிக்காவில் காணப்படுகிறது. இது மூக்கு, வாய் பகுதிகளில் சீதப்படை தோல் மேற்பரப்புச் சந்திக்கும் பகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. நோய்த்தாக்கமுடைய பகுதிகளில் ஒன்று அல்லது இரண்டு ஒட்டுண்ணிகள் மட்டுமே காணப்படுவதால் நோயினை

**யதார்த்திகன்**

உறுதிப்படுத்துவது மிகக் கடினமானதாகும். மேலும் இந்நோய்க் கட்டுப்பாடு, சிகிச்சை முறைகளையும் நெடுந்தீவிலே இந் நோய்த் தாக்கம் பற்றிய தகவல்களினையும் உலக சுகாதார ஸ்தாபன வைத்திய நிபுணர்களின் ஆய்வு முடிவுகளைக்கொண்டு மீண்டும் வலம்புரி வாயிலாகச் சந்திப்போம். □

# ஜே.வி.பியினர் மீண்டும் அரசுடன் இணைந்து செயல்படுவார்கள்

## அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே நம்பிக்கை

(கொழும்பு)

எதிர்காலத்தில் ஜே.வி.பியினர் அரசாங்கத்துடன் இணைந்து கொள்வார்கள் என்று அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே நம்பிக்கை தெரிவித்துள்ளார். நீர் கொழும்பிலுள்ள லக்கலவில் இடம் பெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் ஜே.வி.பி அமைச்சர்களினால் ஆரமபிக்கப் பட்டதிட்டங்கள் எதுவும் கைவிடப்படவில்லை எனத் தெரிவித்துளளார்.

சிறு கைத்தொழில் துறை அமைச்சராக கே.டி.லால்காந்த பதவிவகித்த சமயம் லக்கல நிறுவனததை இலாபகரமாக ஒரு நிறுவனமாக இயங்கச் செய்வதற்கென விரிவான திட்டம் ஒன்றைத் தயாரித்திருந்தார்.

உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கு வெளிநாட்டு சந்தை வசதிகளைப் பெற்றுத்தரவென கே.டி. லால்காந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார் என்றும் அமைசசர் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார். (க-7)

# புத்தளம் மாவட்டத்தில் முன்பள்ளி மாணவர்கள்

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் கல்வி பயிலும் முன்பள்ளி மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்காக முறையான செயல் திட்டங்கள் எதுவும் நடைமுறைப்படுத்தப் படவிலலையென வன்னி மாவட்ட புனர்வாழ்வு அபிவிருத்தி அமைசசர் றிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

புத்தளம் பகுதியில் நடைபெற்ற முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டுப் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். கடந்த 15 வருடகாலமாக முன்பள்ளியில்கல்வி கற்றுவரும் மாணவர்களின கல்வி சரியான முறையில் செயற்படுத்தப்படவில்லை என்றும் அவர் கூறினார்.(து-8)

சுனாமியால் பாதிப்புற்றோர்

# மேலும் 2 மாதங்களுக்கு நிவாரணங்களை பெறலாம்

(கொழும்பு)

சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலும் இரண்டு மாதங்களுக்கு உணவு நிவாரண உதவிகளை வழங்க உலக உணவுத்திட்டம் இணங்கியுள்ளது.

இதற்கமைய இந்த உணவு நிவாரணங்கள் வழங்கப்படவேண்டிய பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை துரித கதியில் கணக்கிடப்படவேண்டியுள்ளதாக நிவாரணப் புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் எம்.எஸ். ஜெயசிங்க் தெரிவித்துள்ளார்.

இதற்கான நடவடிக்கைகளை மாவட்ட செயலாளர்கள் மற்றும் அரசாங்க அதிபர்கள் மேற்கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட 7 இலட்சத்து 50 ஆயிரம் மக்களுக்கு உணவு நிவாரணங்களை வழங்குவதற்கு உலக உணவுத் திட்டம் முன்னர் உறுதி வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டள்ளார்.

எனினும், சுனாமியினால் பாதிககப்பட்ட மக்களின் எண்ணிக்கை 9 இலட்சத்து 50 ஆயிரமாக அதிகரித்தது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே, உரிய எண்ணிக்கையை கணககிடும் பொருட்டு புதிய கணக்கெடுப்பு ஒன்று நடத்தப்படவேண்டியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (க-9)

# பாலியல் கொடுமைக்குப் பலியான சிறுமி

கல்தோன்றா, மண் தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றியவன் மனிதன. இந்த மனிதனின் மனதில் ஈவு, இரக்கம், அன்பு, பாசம், ஆசை என்ற நல்விதைகளை விதைத்த ஆண்டவன் அத்துடன் பொறாமை, பேராசை, காமம் என்ற கெட்ட குணங்களையும் சேர்த்தே விதைத்து விட்டான். இதனால் சில நேரங்க ளில் பல மனிதர்கள் மிருகமாக மாறிச் சிலகுற்றங்கள் செய்ய நேரிடு கிறது. இந்தக் குற்றங்களில் 80 சதவீதம் பாலியல் பலாத்காரம் என் பது தான் கொடுமையானது. இந்தக கொடூரமான ஈவு இரக்கமற்ற பாலி யல் பலாத்காரங்கள் உறவுக்காரா கள் மூலமாகவும் தெரிந்தவர்கள் மூலமாகவும் அதிகமாக நடை பெறுகிறது என்ற உண்மை வேத னையிலும் வேதனை என்றே சொல்ல வேண்டும்.

இந்த வரிசையில் பருவமடை யாத 13வயது சிறுமியை 48வயது நிரம்பிய ஒரு மனித மிருகம் பாலி யல் பலாத்காரம் செய்து கொன்று 200அடி ஆழமான பாழுங்கிணற் றில் வீசி எறிந்த கொடூரம் மறக் கவோ மன்னிக்கவோ முடியாதது.

கொங்கு தமிழ் கொஞ்சும் கோய முத்தூரிலிருந்து 20கிலோ மீற்றர் தூரத்திலுள்ளது கோவில்பாளை யம் என்ற கிராமம். இந்தக் கிராமத் தில்தான் இந்தப் பாலியல் வன் முறைக் கொடூரம் நிகழ்ந்திருக் கிறது. இநத ஊரில் வசிப்பவர் தான் பாபு என்னும் கூலித் தொழிலாளி. இவருக்கு சந்திரா என்ற மனைவி யும் அனிதா என்ற 13வயது மகளும் மைக்கேல் ராஜ் என்ற 9வயது மக னும் இருந்திருக்கிறார்கள். தினமும் கூலி வேலைக்குச் சென்று 50ரூபா கொண்டுவந்தால்தான் அன்றிரவு அவர்கள் வீட்டில் அடுப்பு எரியும். இல்லையென்றால் எல்லோரும் பட்டினிதான்.

இந்த வறுமையான சூழ்நிலை யிலும் மகள அனிதாவையும் மகன் மைக்கேல ராஜையும் படிக்கவைத்த பாபு தன் பிள்ளைகளுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்கித்தர வேண்டுமென்ற கற்பனை உலகில் மிதந்துகொண்டிருந்தான்.

அதே ஊரில வசிப்பவன் மூர்த்தி. அவனுக்கு 10ஆம் வகுப்பில் படிக் கும் மகனும், திருமணம் முடித்த மகளும் இருக்கின்றனர். 48வயது நிரம்பிய இந்த மூர்த்தி குடும்பத் தில் அக்கறை காட்டாமல், வேலைக் கும் போகாமல் மனைவி சம்பாத்தி யத்தில் வாழ்ந்துகொண்டிருந்தான். இவனின் பழக்கம் குடிப்பதும் சூதா டுவதும், காசு இல்லையென்றால் திருடுவதுமே.

இது ஒரு புறமிருக்க இநத மூர்த்தி என்பவன் அனிதாவுக்கு தாய் மாமன் முறை. அதாவது அனிதாவின் அம் மாவுக்கு சித்தப்பா மகன். தாய் மாமன் என்றால் தாயக்குச் சமமான வன் என்று அர்த்தம். இந்த தாய் மாமன் என்ற உறவு அவ்வளவு புனிதமானது. ஆனால் மூர்த்தியோ அந்த உறவைக் கொச்சைப்படுத்தி விட்டான்.

3.6.2005அன்று இரவு மூர்த்தி குடிபோதையில் வந்துகொண்டிருக் கிறான். தெருவில் 13வயது அனிதா மற்றச சிறுவர் சிறுமிகளுடன் விளை யாடிக்கொண்டிருக்கின்றாள். சற்று நேரத்துககுமுன் அந்த இடத்துக்கு வந்த அனிதாவின் தாய் நேரமாகி விட்டது வீட்டுக்கு வா என்று அனி தாவைக் கூப்பிட்டிருக்கிறாள். 'நீ போய் படுத்துக்கொள் அம்மா, நான் இன்னும் சிறிது நேரம் விளையாடி விட்டு வருகிறேன் என அனிதா கூறி யிருக்கிறாள்.

வழக்கம்போல மகள்வருவாள் என்ற எண்ணத்துடன் தாயார் வீட் டுக்குப்போய்விட, நிறைபோதை யில் மூர்த்தி அங்குவருகிறான். விளையாடிக்கொண்டிருந்த அனி தாவைப் பார்த்ததும் மூர்த்திக்குக் காமவெறி தலைக்கேறியது. காமம் அவனை மிருகமாக்கியது. ஏதோ கற்பனை செய்துகொண்டவன் சிறுமி அனிதா விடம் வந்து "உன்தந்தை குடிபோதையால் விழுந்து கிடக் கிறான் வா' இருவரும்சென்று அவ னைத் தூக்கிவரலாம் என்று அழைத் திருக்கிறான். ஒன்று மறியாத அச் சிறுமி அவன் பொய் வார்த்தைகளை நம்பி அவனுடன் சென்றிருக்கிறாள்.

அக்காமக் கொடூரன் மூர்த்தி யின் சைக்கிளில் ஏறி அமர்ந்தாள் சிறுமி அனிதா. இன்னும் சில நிமி டங்களில் தன்னைச் சிதைத்துச் சின்னாபின்னமாக்கி, கொல்லப் போகிறான என்பதை அறியாத அச் சிறுமி அவனை நம்பிச் சென்றிருக் கிறாள். கோவில்பாளையத்தைக் கடந்து ஒருகிலோ மீற்றர் தூரத்தி லுள்ள முட்காடுவழியே மூர்த்தி அனிதாவை அழைத்து வந்திருக் கிறான். அக் கும்மிருட்டில் மிரண்டு போன அசசிறுமி அபபா எங்கே என்று கேட்டிருக்கிறாள். இங்குதான் கிடக் கிறான் என்று கூறி முட்புதருக்குள அழைத்துச் சென்றவன் உடனே அசசிறுமியைப் பலாத்காரம் செய்ய முறபட்டிருக்கிறான். அவனைத் தளளிவிட்டு தப்பிக்க முயன்றிருக் கிறாள் அனிதா. அவனோ அனிதாவை விடுவதாக இல்லை. அந்த மனித மிருகத்தின் கோரப்பிடியிலிருந்து தப்பகக முடியாமல் சிககிக்கொண் டாள் அச்சிறுமி. அந்தக்காமக் கொடூ ரன் சிறுமியைப் பலவந்தப் படுத் தும்போது அச் சிறுமி கத்திக் கதறி வாய்விட்டு அழுது துடித்திருக்கி றாள். அவள் நிலையை அறியாத அக்காமக் கொடூரனுக்கு தன் இச் சையைத் தீர்ப்பதே முக்கியமாக இருந்திருக்கிறது. சத்தம் போடும் அச்சிறுமியின் வாயையும் மூக் கையும் தன் கைகளால் அழுத்திப் பிடித்திருக்கிறான். மூச் சுத்திண றல் ஏற்பட்ட நேரத்திலும் கூட அச் சிறுமி தப்பிச்செல்ல முயற்சித்தி ருக்கிறாள் பாவம்! சற்று நேரத்தல் அக் கொடியவன் கைகளிலே பிண மாகச் சரிந்திருக்கிறாள் சிறுமி அனிதா.

அவள் இறந்துவிட்டாள் என் பதை அறிந்த அம் மனித மிருகம் உடனே அவளைத் தூக்கித் தோளில சுமந்துகொண்டு சென்று பக்கத்தி லுள்ள பாழடைந்த 200 அடி ஆழ முள்ள கிணற்றுக்குள் தூக்கி வீசி விட்டு ஊரைவிட்டே ஓடித் தலைமறை வாகிவிட்டது.

## தாய் மாமன் உருவில் காமக்கொடூரன்

அன்று இரவு அனிதா வீட்டுக்கு வராததால் தந்தையும் தாயும் அவ ளைத் தேடியிருக்கிறாகள். அனிதா பாட்டி வீட்டில் வளர்ந்தவள. அவள அங்கிருப்பாள் என்று தங்களைச் சமாதானப்படுத்திக்கொண்டிருக் கிறார்கள். மறுநாள் காலை மகளைத் தேடி அவள் பாட்டி வீட்டிலும் இல்லை யென்பதை அறிந்து ஊர் முழுவ தும் தேடியிருக்கிறார்கள். பாழுங் கிணற்றில் பிணமாக மிதக்கும் அனிதாவின் உடலை யாரும் பார்கக வில்லை. அன்று மாலைவரை அனி தாவைத தேடிககளைத்த நிலையல் ஒரு நபர்வந்து அனிதாவை மூர்த்தி தான் சைக்கிளில் ஏற்றிச் சென் றான் என்று கூறவே உடனே மூர்த்தி வீட்டுக்கு விரைந்திருக்கிறார் பாபு.

மூர்த்தி வீட்டுக்கே வரவில்லை என்று மூர்த்தி வீட்டார் கூறவே, என்ன செய்வது என்று தெரியாமல் அவ் வூர்த தலைவர் செல்வராஜ் என்பவ ரின் துணையோடு பல இடங்களில் தேடுதல் வேட்டை நடத்தி கடைசி யில் ஊட்டி மார்க்கட்டில் பதுங்கி யிருந்த மூர்த்தியைப் பிடித்திருக் கிறார்கள்.

ஒருநாள் முழுவதும் விசாரித்தும் மூர்த்தியிடமிருந்து தகவல் ஏதும் பெறமுடியாததால் துவண்டுபோன பாபு பொலிஸில் புகார் கொடுக்க பொலிஸ் மூர்த்தியை விசாரிக்க ஒரு பொய்யான கட்டுக்கதையை விட்டிருக்கிறான் மூர்த்தி.

குன்னூரில் ஒருவரிடம் அனி தாவை 250ரூபா பணத்துக்கு விற்று விட்டதாகக கூறியிருக்கிறான். பணத் தைக் கொடுத்து மகளை மீட்டு விடலாமென்ற ஆசையுடன் குன் னூர் விரைந்த பாபு, மூர்த்தி சொன னது கட்டுக்கதை என்பதை அறி கிறான்.

மூர்த்தி சமாத்தியமாக எதையோ மறைக்கிறான் என்பதை உணர்ந்த பொலிஸ் அவனை விசாரிக்க வேண் டிய முறையில் துருவித் துருவி விசாரிக்கவே உண்மையைக் கக்க ஆரம்பித்தான் மூர்த்தி.

பொலிஸ் விசாரணையில் உண மைகளை ஒப்புக்கொண்ட மூர்த்தி அனிதாவை தூக்கிவீசிய கிணற் றைக் காட்டியிருக்கிறான். பாழுங் கிணற்றில், ஆசையாய் வளர்த்த அருமை மகள் பிணமாகக் கிடப் பதைக்கணடு கதறியழுத பெற்றோ ரோடு அந்த ஊர் மக்களும் அழுது புலம்பியிருக்கிறாகள். அந்த இடத் திலேயே அனிதாவின் உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு அடக் கம் செய்யப்பட்டது.

காமக் கொடூரன் மூர்த்தியை பொலிஸ் சிறையில் அடைத்து விட டது. இபபடியொரு கோரச் சம்பவம் நடநததைப் பார்த்த அந்த ஊர் மக் கள் கொதித்தெழுந்து அந்த மூர்த் தியையும் அவன் குடும்பத்தாரை யும் ஊருக்குள் சேர்க்கமாட்டோம் என்று கூறியிருக்கிறார்கள்.

தெரிந்தோ தெரியாமலோ மூர்த் தியின காமவெறிக்கு அனிதா பலி யாகிவிட்டாள். ஏற்கனவே இது போலவே மூர்த்தி ஒரு சிறுமியை பலாத்காரம் செய்துள்ளான் என் பதை ஊர் மக்கள் சொல்ல ஆரம் பித்திருக்கிறார்கள்.

இந்தக் கொடூரமான குற்றங் களைச் செய்த மூர்த்திக்கு சட்டம் தூக்குத் தண்டனை கொடுக்க வேண டும்; அல்லது ஆயுள் தண்டனை கொடுகக வேண்டும் என்பதே கிராம மக்களின் கருத்து.

நெஞ்சை உருக்கும் இப்படி யொரு சமபவம் நடந்திருக்க, தாசில் தார், கலெக்டர், எஸ்.பி.பொன் மாணிக்கவேல் அனைவரும் ஒத் துழைப்புத் தந்து தங்களுக்கு உதவி யதாகக் கூறுகிறார் அனிதாவின் தந்தை பாபு. ஆனால் இந்தக் கொடூர சம்பவத்தைப் பற்றி விசாரிக்கச் செய் தியாளர்கள் சென்ற போது அந்த ஏரியா இன்ஸ்பெக்டரும மறறைய காவலர்களும் பேச மறுத்துவிட்டார் கள் எனக் கூறப்படுகிறது. இப்படி யான ஒரு சம்பவத்தைப் பற்றிச் சொல்ல ஏன் மறுக்கிறார்கள் என் பது அனைவருக்கும் ஆச்சரிய மாகவே இருக்கிறது.

எது எப்படியிருந்தாலும் 13வயது வரை வளர்த்து ஆளாக்கி தாய் மாமன் என்னும் காமக் கொடூர னுக்கு பலிகொடுத்துத் தவிக்கும் பெற்றோர்களுக்கு அரசாங்கம் உதவ வேணடும். அதோடு மனித உரிமை மையங்களும் அக்கறை காட்ட வேண்டும். எவ்வளவோ குற்றங்கள் நாட்டில நடைபெற்றாலும் பாலியல் பலாத்காரம் என்பது மிகவும் கண் டிக்கத்தக்க ஒன்று.

என் மகளுககு நடந்தது போன்ற கொடுமை இனி வேறு எவருக்குமே நடக்கக்கூடாது எனக் கண்ணீரும் கம்பலையுமாகக் கூறுகிறார் அனி தாவின் தந்தை பாபு. இதுபோன்ற குற்றங்கள் மேலும் நிகழாமல் இருக்கவேண்டுமென்றால் பெண் பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும். யார் நல்லவர்கள், யார் கெட்டவா கள் என்பது இலேசில் கண்டுபிடிக்க முடியாத ஒனறு. ஆகையால் தெரிந் தவாகளாக இருந்தாலும் தெரியாத வர்களாக இருந்தாலும் உறவினர் களாக இருந்தாலும் பெண் பிள்ளை களை அவர்களுடன் பழக விடுவ தைத் தவிர்த்தால் இவன்போன்ற காமக் கொடூரர்களிடமிருந்து தம் பிள்ளைகளைக் காப்பாற்றிக்கொள் ளலாம். நடந்த சம்பவத்தை ஒரு பாட மாகக் கொண்டு பெற்றோர்கள் விழிப புணர்சசியுடன் இருகக வேணடும்.

மூர்த்தியைப் போன்ற காமக்

பொ.இராசதுரை

கொடூரர்கள் எங்கேயோ ஒரு மூலை யில், செய்யும் தவறுகள் நல்லவர் களையும் சந்தேகம் கொள்ளவைக் கிறது என்பதை நினைக்கும்போது மனதுக்கு வேதனையாகும். இருந் தாலும், நேற்று பலசிறுமிகள்; இன்று அனிதா; இதை உணர்ந்து நாளை நம் பிள்ளைகளுக்கு இந்நிலை வரா மல் தடுத்தால் நம்பிள்ளைகளுடன மகிழ்ச்சியுடன் வாழலாம்.

# மாந்தை கிழக்கில் நியாப் திட்டத்தின்கீழ் 100 வீடுகள்

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந தைகிழக்கு பிரதேசத்தில் 2005ஆம் ஆண்டு நியாப் திட்டத்தின் மூலம் புதி தாக 100வடுகள் அமைச்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் பிரகாரம் ஒவ் வொரு வடும் இரண்டரை லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளதாக வும் இத்திட்டத்துக்கு அமைவாக நான்கு கிராமங்கள் தெரிவு செய் யப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள, பாலைப்பானிக் கிராமத் தில் 35வீடுகளும், சிராட்டிக்குளத் தில் 31 வீடுகளும், இராமியக்குளத் தில் 4 வீடுகளும், கரும்புளியானில 30வீடுகளும் அமைக்கப்படவுள்ள தாக மாந்தை கிழக்குப் பிரதேச செய லாளர் மா.ஜெகூ தெரிவித்தார். ஏற் கனவே கடந்த ஆண்டு இத்திட்டத் தில் பரீட்சார்த்தமாகப் பாண்டியன் குளம், கிராம சேவையாளர் பிரிவில ஒன்றரை இலட்சம் ரூபா செலவில் செலவில் 25வீடுகள் அமைக்கப் பட்டுள்ளதாகவும் அவை மிக விரை வில் உரியவர்களிடம் ஒப்படைக் கப்படவுள்ளதாகவும் பிரதேச செய லாளர் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின்கீழ் 2005ஆம் ஆண்டு அமைய இருககும் வீடுகளுக கான கொடுபபனவு நான்கு கட்டங் களாக வழங்கப்படவுள்ளது. முதலா வது கட்டக் கொடுப்பனவாக ரூபா 50 ஆயிரமும், இரணடாவது கடடமாக 60 ஆயிரமும் மூன்றாவது கட்டமாக 80 ஆயிரமும் நான்காவது கட்டமாக 60 ஆயிரமும் வழங்கப்படவுள்ளது.

மாந்தை கிழக்கு பிரதேசத்தில் எந்தவிதமான அடிப்படை வசதிகளு மறறு 20வருடங்களுக்கு மேலாக சிறிய ஓலைக்குடிசையிலே வாழ்நதுவரு கின்ற மக்களுக்கு இரண்டரை இலட் சம் ரூபா செலவில் புதிய வீடுகள் அமைத்துக்கொடுக்கபபடுவதுடன் அவர்கள், குடியிருக்கும் காணிகளுக் கும் அனுமதிப்பததிரம வழங்கப்பட வுள்ளதாகவும் உதவிக்காணி ஆணை யாளரும பிரதேச செயலாளருமான ஜெகூ தெரிவித்துள்ளார். (து-128)

# தீந்தை வங்கி திறப்பு

சர்வதேச தரம்வாய்ந்த மல்ரிலாக் பெயின்ற் கம்பனி தனது முகவ ரான நெலலியடி கணேஷா ஹாட்வெயர் ஸ்தாபனத்தில் கணனி மயப்படுத தப்பட்ட தீந்தை (பெயின்ற்) வங்கி ஒன்றைக் கடந்த திங்கட்கிழமை திறந்துவைத்துள்ளது. சுமார் 10ஆயிரம் வகையான வர்ணங்களை கலந்து வாடிக்கையாளர்களுக்கு வழங்கவுள்ளனர்.

முற்றிலும் கணனிமயப்படுத்தப்பட்ட இயந்திரம் மூலமே வர்ணங்கள் கலவை செய்து வழங்கப்படுகிறது. இதேபோல் யாழ்.நகரில் கந்தவேலன் ஸ்தாபனத்திலும் வன்னியில் பாண்டியன் களஞ்சியத்திலும் தமது தீந்தை வங்கியை இவர்கள் நிறுவியுள்ளனர். இதனால் வீட்டிற்குத் தேவையான நிறங்களை தாமே தெரிந்தெடுத்துப் பூசிக்கொள்ளும் வாய்ப்பு பொதுமக் களுக்குக் கிட்டியுள்ளது. (க-101)

# "மக்கள் சக்தி" நடவழக்கைக்கு பொதுமக்கள் பலத்த ஆதரவு

(கொழும்பு)

மக்கள் சக்தி நடவடிக்கையின் மூலம் மககளின் பெரும் ஆதரவினை பெற்றுள்ளதாகக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரிய தெரி வித்துள்ளார்.

1999ஆம ஆண்டு டிசம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடை பெறறது. அதில் போட்டியிட்ட சகல வேட்பாளர்களும் 6 ஆண்டுகளுக் கான மக்கள் ஆணையை கேட்டார் கள். 7ஆண்டுக்கான மககள ஆணையை கேட்கவும் இல்லை. மக்கள் 7ஆண்டு களுக்கான ஆணையை வழங்க வுமில்லை. 1999ஆம் ஆண்டின் படி 6ஆணடுக்கான மக்கள் ஆணை டிசம் பா மாதத்துடன் முடிவடைகின்றது.

எந்த விதத்திலும் ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்க முயற்சித் தால அது ஜனநாயக உரிமையை மீறும் செயலாகும். 2000ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட அரசியலமைப் புத் திருத்தத்தில் 1999ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதி பதி தேர்தல் உத்தியோக பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் காரணமாக எந்தவொரு விதத்தி லும் ஜனாதிபதி தேர்தலை ஒத்தி வைபபதற்கு ஐக்கியதேசியக்கட்சி அனுமதிக்காது.

அதேபோல் நாட்டு மக்களும் இதனை அனுமதிக்க மாட்டார்கள் என்றும் எமக்குத் தெரியும். ரணில் விககிரமசிங்கவை ஜனாதிபதியாக் குமாறு கோருகின்றோம். ஜனநாயக ரீதியாக பிரச்சினைகளை எதிர் நோக்கி மிக விரைவில் நிலையான இராஜதந்திரத் தீர்வை ஏற்படுத்து வோம் என்ற செய்தியைத்தான் இன்று நாட்டு மக்களுக்கு கூற விரும புகின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-8)

# கோட்டமட்டத்தில் பரீட்சைகள்

(மருதங்கேணி)

வடமராட்சி வலய கல்வித் திணைககளம் பாடசாலை மாண வர்களுக்கான இரண்டாம் தவணை பரீட்சையை கோட்ட மட்டத்தில் நடத்துவதற்கு கல்வித் திணைக் களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வடமராட்சியிலுள்ள மூன்று கல்விக் கோட்டத்திலும் இப் பரீட் சைகள் நடைபெற ஏற்பாடாகியுள் ளது. பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி ஆகிய மூன்று கல்வி கோட்டத்திலும் இப்பரீட்சைகள் நடைபெறவுள்ளன. (க-35)

# மாந்தை கிழக்கு அபிவிருத்திக்கு 7 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

(முல்லைத்தீவு)

மாந்தை கிழக்கு பிரதேசத்தின் அபிவிருத்தி வேலைகளுக்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செல வுத்திட்டத்தின் மூலம் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் 7 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்நிதியத்திலிருந்து கடந்த 45 வருடங்களாகப் போக்குவரத் துச்செய்ய முடியாத அளவுக்குச் சேதமடைந்திருக்கும் வீதி அபிவி ருத்தித் திணைக்களத்துக்குச் சொந தமான கொம்புவைததகுளம், மூன்று முறிப்பு வீதி ஆகியவற்றைச் செப் பனிட இண்டரை இலடசம் ரூபாவும் நட்டான்கணடல் பாடசாலை, விளை யாட்டு மைதானம் முதலியவற்றை புனரமைக்க ஒரு இலட்சம் ரூபா வும, விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாடடு உபகரணங்கள் கொள் னவுசெயய ஒரு இலட்சம் ரூபாவும் பாணடியன்குளம், வன்னிவளாங குளம் பாடசாலைகளுக்கு புத்தகங் கள் கொள்வனவு செய்ய 75ஆயிரம் ரூபாவும், மாந்தை கிழக்கு பிரதேச சபை நூலகங்களுக்கான தளபாடங் கள் கொள்வனவு செய்ய 50 ஆயிரம் ரூபாவும் வன்னிவிளாங்குளம மயா னததைத் திருத்த 50 ஆயிரம் ரூபா வும முன்று முறிப்பு கிராம அபிவிருத் திச் சங்கத்துக்கு சூரிய மின்கலம் கொள்வனவு செய்ய 50 ஆயிரம் ரூபா வும ஒதுக்கீடுசெய்யப்படும்.(து-128)

ரஷ்யாவில் பயங்கரம்!

# வணிக வளாகத்தில் தீக்குண்டு வீச்சு 20 பேர் கருகிப் பலி; 45 பேர் படுகாயம்



(மொஸ்கோ)

ரஷியாவில் வணிக வளாகத்தில் தீக்குண்டு வீசப்பட்டதில் 20 பேர் உடல் கருகிப் பலியாகியுள்ளதுடன் 45 பேர் வரை படுகாயமடைந்துள்ளனர்.

இங்கிலாந்து தலைநகர் இலண்டனில் கடந்த வியாழக்கிழமை சுரங்க ரயில்களிலும், மாடி பஸ்சிலும் தீவிரவாதிகள வைத்த குண்டுகள் வெடித்ததில் 50க்கும் மேற்பட்டவர்கள் உடல் சிதறிச் செத்தனர். மேலும் ஏராளமான பேர் காயம் அடைந்தனர். அந்த பரபரப்பு ஓய்வதற்குள் ரஷ்யாவிலும் ஒரு தாக்குதல் நடந்துள்ளது.

ரஷ்யாவின் வடபகுதியில் உள்ள கோமி பிரதேசத்தில் உள்ளது உக்தா என்ற நகரம. இங்கு சுமார் 1 இலட்சம் மக்கள் வசிக்கிறார்கள்.

இந்த நகரில் உள்ள ஒரு வணிக வளாகத்தில் நேற்றுமுன்தினம் பிறபகல் 3.28 மணிக்கு வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

அந்தக் கட்டடம் 2 மாடிகளைக் கொணடது. அங்கு வந்த மர்ம மனிதன் ஒருவன் பாட்டில வெடிகுண்டுத் திரியில் தீயைப் பற்றவைத்து கட்டடத்திற்குள வீசிவிட்டு ஓடிவிட்டான். இதனால் கட்டடத்தில் தீப்பிடித்துக் கொணடது. அங்கு வைக்கப்பட்டிருந்த கியாஸ் சிலிண்டரும் வெடித்துச் சிதறியது.

அங்கு இருந்தவர்கள் தீயில் சிக்கிக கொண்டனர். இந்த தீ விபத்தில் 20 பேர் உடல கருகி செத்தனர். மேலும் கடைக்காரர்கள உட்பட 45 பேர் வரை காயமடைந்துள்ளனர். தகவல் கிடைத்ததும் தீயணைப்புப் படையினர் விரைந்து சென்று நீண்டநேரம் போராடி தீயை அணைத்தனர். உள்ளே சிக்கிய 30 பேரை மீட்டு வெளியே கொண்டு வந்தனர். இந்தச் சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ற)



கிர்குக் நகரில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் உருக்குலைந்த காரை சோதனை செய்யும் ஈராக் பொலிஸ் அதிகாரிகள்.

# அயோத்தி தாக்குதல் சம்பவம்; இதுவரை 6 பேர் கைது

(அயோத்தி)

அயோத்தி ராமர் கோயில் வளாகத்தில் நடநத தாககுதல் சம்பவம் தொடர்பாக தடை செய்யப்பட்ட இந்திய இஸ்லாமி மாணவர் இயக்கத்துடன் தொடர்புடைய 4 பேர் உட்பட 6 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இஸ்லாமிய மாணவர் அமைப்பின் முன்னாள உறுப்பினர்கள் 2 பேரை பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை கைது செய்தனர். விசாரணைக்கு பின்னர் அவர்கள் விடுவிக்கபபட்டனர்.

அதே அமைப்பின் வேறு இருவரை பொலிஸார் திங்கட்கிழமை கைது செய்துள்ளனர். பயங்கரவாதிகள் தங்குவதற்கு புகலிடம் அளித்த 4 பேரை அம்பேத்கர்நகா மாவட்டத்தில் பொலிஸார் ஞாயிற்றுக் கிழமை கைது செய்துள்ளனர். (ற)

தீவிரவாதிகளின் அடுத்த இலக்கு பாக்.!

# அங்குள்ள அமெ., பிரி., ஈரான் அதிகாரிகளை தாக்க திட்டம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் அமெரிக்கா, பிரிட்டன, ஈரான் தூதரக அதிகாரிகளை தாக்க பயங்கரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக இரகசி தகவல் கிடைத்துள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

பாகிஸ்தானின் உளளூர் பத்திரிகை ஒன்று இச் செய்தியை வெளியிட்டுள்ளது.

ஹர்கத் உல முஜாஹிதீன அல்-அலாமி, ஹர்கத் உல் ஜிஹாதி-இ-இஸ்லாமி, ஹர்கத் உல் அன்சர், ஜெய்ஷ் முகமது, லஷ்கர்-இ-ஜாங்க்வி, மில்லத்-இ-இஸ்லாமியா ஆகியன உடபட தடை செய்யப்பட்ட பல அமைப்புகள் இந்தத் தாக்குதலில் ஈடுபட லாம் என்றும் அந்தப் பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கிய அமைச்சர்கள், அதிகாரிகளும் பயங்கரவாதிகளின் தாக்குதல் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். சில தேவாலயங்கள மீதும் தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்தவும் பயங்கரவாதிகள் திட்டமிட்டுளளதாகத் தெரிகிறது.

இந்தத் தாக்குதலுககாக தலா 3பேர் கொண்ட சிறிய படைகள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் அவர்களிடம் நவீன ஆயுதங்கள் உள்ளன என்றும் கூறப்படுகிறது. பயங்கரவாதத்துக்கு எதிராக சர்வதேச அளவில் இயக்கத்தை நடத்தி வருகிறது அமெரிக்கா. இதற்கு உதவி செய்வதை பாகிஸ்தான் நிறுத்த வேண்டும் என்று நிர்ப்பந்திக்கவே இந்தத் தாக்குதல் திட்டம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)



ஜார்ஜியாவில் கிழக்கு டப்பிள் நகரில் 'சகதிக் குளத்தில் குதிக்கும் திருவிழா' நடந்தது. இதில் ஏராளமானோர் பங்கேற்றனர். ஒரு வீரர் குதிக்கும் போது தெறிக்கும் சகதியை மக்கள் உற்சாகமாக ரசிக்கின்றனர்.

உலக நாடுகளின் 100 பொலிஸ அதிகாரிகள் இலண்டன் விரைவு!

# இலண்டன் சுரங்கரயில் குண்டுவெடிப்பு; 30 தீவிரவாதிகளின் பட்டியல் தயாரிப்பு

(இலண்டன்)

சுரங்க ரயில் குண்டு வெடிப்பில் தொடர்பாக ஆராய இலண்டன் பொலிஸாருக்கு உதவ உலக நாடுகளைச் சேர்ந்த 100 பொலிஸ் அதிகாரிகள் இலண்டன் சென்றுள்ளனர்.

குண்டு வெடிப்பில் தொடர்பு இருப்பதாக சந்தேகிக்கப்படும் 30 தீவிரவாதிகளின் பட்டியலை அவர்கள் தயரித்துள்ளனர். இலண்டன் நகரில் சுரங்க ரயில்களிலும் ஒரு மாடி பஸ்ஸிலும் 4 குண்டுகள் வெடித்ததில் 70 பேர் பலியானார்கள். 700 பேர் படுகாயம் அடைந்தனர். சக்தி வாய்ந்த அந்தக் குண்டுகள் வெடித்ததில் சில ரயில பெடடிகள் 1000 அடிக்கு கீழே புதைநதுவிட்டன.

குண்டு வைத்த தீவிரவாதிகளை பிடிப்பதில் ஸ்கொட்லாந்து பொலிஸின் தீவிரவாத ஒழிப்பு பிரிவினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கு உதவ பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 100 பொலிஸ அதிகாரிகள் இலணடன சென்று முகாமிட்டுள்ளனா. இவர்கள தீவிரவாதிகளின் நடமாட்டம், நடவடிக்கைககள் பற்றி நன்கு அறிந்தவர்கள்.

சுரங்க ரயில் குண்டு வெடிப்பில் தொடர்பு இருப்பதாக சந்தேகிக்கப்படும் 30 தீவிரவாதிகளின் பட்டியலை ஸ்கொட்லாந்த யார்டு பொலிஸ் அதிகாரிகளும், உலக நாடுகளின் பொலிஸ் அதிகாரிகளும் சேர்ந்து தயரித்துள்ளனர். செலபோன மற்றும் போன்களை ஒட்டுக்கேட்டு இநதப பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

அதில் அதிகமாக சந்தேகப்படுவது 47 வயதான சிரியா நாட்டைச் சேர்ந்த முஸ்தபா செட்மரியம் நாசர் என்பவனைத்தான். இவன ஏற்கனவே இலண்டனில் வசித்து உள்ளான். ஆப்கானிஸ்தானில் தீவிர வாதிகளுக்கு பயிற்சி முகாம் நடத்தி இருக்கிறான். ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட்டில் 191 பேர் பலியான குண்டு வெடிப்புக்கு மாஸ்டர்பிளான் தயாரித்து கொடுத்தவன் இவன்தான் என்று கூறப்படுகிறது. தற்போது இவன் ஈராக்கிலோ அல்லது பாகிஸ்தான் -ஆப்கானிஸ்தான் எல்லையிலோ தலைமறைவாக இருப்பதாகக் கூறப்படுகிறது. நாசருக்கு அடுத்து அதிகமாக சந்தேகப்படும நபர் மொகமது அல்செர்பாசி மொராக்கோ நாட்டில் பிறந்த இவன் கடைசியாக இங்கிலாந்து குடியுரிமை பெற்ற இலண்டனில் வசித்துவந்தான். சுரங்க ரயிலில் குண்டு வெடித்ததும் தலைமறைவாகிவிட்டான்.


மொராக்கோ நாட்டில் நடந்த குண்டு வெடிப்புக்குக் காரணமான இவனுக்கு மொராககோ இஸ்லாமிய கோர்ட்டு 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை அளித்தது.


ஆனால், தீர்ப்பு அளிக்கப்பட்டபோது அவன் இங்கிலாந்தில் வசித்து வந்தான். மொராக்கோ இங்கிலாந்து இடையே கைதிகள பரிமாற்ற ஒப்பந்தம் இல்லாததால் செர்பாசியை மொராக்கோ நாட்டம் ஒப்படைக்கவில்லை. 30 பேர் பட்டியலில் இங்கிலாந்தில் பிறந்து தீவிரவாதி ஆனவர்களின் பெயர்களும உள்ளன.

சுரங்க ரயில் குண்டு வெடிப்பில் 3 முதல் 12 தீவிரவாதிகள் ஈடுபட்டிருக்கலாம் என்று இலண்டன் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்தக் குண்டு வெடிப்பு தொடர்பாக இலணடனில் பிறந்த தீவிரவாதி ஒருவனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஸ்கொட்லாந்து யார்டு பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி இலண்டனில் இருந்து வெளிவரும் 'தி இண்டிபெண்டண்ட' பத்திரிகை மேற்கொண்ட தகவல்களை வெளியிட்டுள்ளது. (ற)

உலக தரிசனம்





இன்று அமெரிக்கா விண்ணில் செலுத்தவுள்ள டிஸ்கவரி விண்கலம்.

# பரபரப்பை ஏற்படுத்திய மர்மப்பை

(இலண்டன்)

இலண்டன் நகரில் பிரதமர் ரொனி பிளேயரின் இல்லம் அருகே கிடந்த மர்மப்பை காரணமாக அங்கு பெரும் பதி ஏற்பட்டது. இதைத தொடர்ந்து அந்த பகுதியில் உள்ள முக்கிய தெருக்கல் உடனடியாக காலி செய்யப்பட்டன.

இங்கிலாந்து தலைநகர் இலண்டனில் கடந்த வியாழக்கிழமை சுரங்க ரயில்களிலும், ஒரு மாடி பஸ்ஸிலும் தீவிரவாதிகள் வைத்த குண்டுகள் வெடித்ததில் 50க்கும அதிகமானோர் பலியானார்கள். மேலும் 700க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனா. இதைத் தொடர்ந்து இலண்டன் நகரம் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இலண்டன் நகரில் ஒயிட்ஹால் சாலைப் பகுதியில் நேற்றுமுன் தினம் மர்மப்பை ஒன்று அனாதையாகக் கிடந்தது. அதில் வெடிகுண்டு வைக்கப்பட்டு இருக்கலாம் என்ற பீதி ஏற்பட்டது.

அந்த இடத்தின் அருகே உள்ள டவுனிங் தெருவில்தான் இங்கிலாந்து பிரதமர் ரொனி பிளேயரின் இல்லம், அலுவலகம் உள்ளன. மேலும் பாராளுமன்றக் கட்டடம், பிரசித்தி பெற்ற பீக்பென்பீ கடிகாரம் மற்றும் முக்கியமான அரசு அலுவலகங்களும் இந்தப் பகுதியில்தான உள்ளன.

தேம்ஸ் நதிக்கரையையொட்டிய தெருக்களில் இவை அமைந்திருக்கின்றன. மர்மப்பை பற்றிய தகவல் கிடைத்ததும் அந்த பகுதிக்கு பொலிஸார் விரைநதனர்.

அங்குள்ள தெருக்கள் உடனடியாக காலி செய்யப்பட்டன. அதாவது, தெருக்களில் நடந்து சென்றவர்கள் அங்கு வந்த சுற்றுலா பயணிகள் மற்றும் அங்கு நிறுத்தப்பட்டிருந்த கார்களை பொலிஸார் உடனடியாக அங்கிருந்து அப்புறப்படுத்தினார்கள்.

ஆனால் கட்டடங்களில் இருந்தவர்கள் வெளியேற்றப்படவில்லை. மோப்ப நாய்களும் வரவழைக்கப்பட்டன. அந்தப் பகுதி முழுவதும் பொலிஸார் சோதனை நடத்தினார்கள். இதனால் அங்கு பர பரப்பான சூழ்நிலை நிலவியது. (ற)

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல் - குறள்

வலம்புரி

# புதிய அரசாங்கத்தை நாடு வேண்டி நிற்கின்றதா?

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பெரும்பான்மைப் பலம் குறைவடைந்துள்ளமையால் பாராளுமன்றத்தின் ஆட்சி ஆட்டம் கண்டுள்ளது.

இலங்கையில் அரசியல் யாப்பு ஜனாதிபதிக்கு அள்ளி வழங்கிய அதிகாரத்தால், நாடு அடிக்கடி தேர்தலைச் சந்தித்ததைத் தவிர, வேறெதுவும் மிச்சமில்லை.

அந்தவகையில், கடந்த வருடம் நடந்த தேர்தலும் ஆரோக்கியமான அரசாங்கத்தை பிரசவிக்காததனால் அதனது ஆயுளும் இரண்டு வருடத்தைத் தாணடுவது கூட சாத்தியம் இல்லைப்போல் தெரிகிறது.

எனினும் பாராளுமன்றத்தில் அரசின் பலம் குறைந்திருந்தாலும் திடீரென தேர்தல் ஒன்றுக்கு மக்களை அழைக்கும் துணிவு ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்காவிற்கோ அன்றி எதிர்க்கட்சிகளுக்கோ இல்லை என்றே கூறவேண்டும்.

மீண்டும் ஒரு தேர்தலை நாடு சந்திக்குமாயின் அதனால் ஏற்படக் கூடியசெலவு நாட்டின் பொருளாதாரத்தையே அதல பாதாளத்திற்குள் தள்ளிவிடும்.

இந்நிலையில் மீண்டும் ஒரு தேர்தலை யார் விரும்பி அழைக்கிறார்களோ அவர்கள் மீது மக்கள் கோபம் கொள்வர். இதனால் தமது அரசியல் எதிர்காலம் பாழாகிவிடும் என்ற அச்சத்தில் தேர்தலை வரவழைக்கும் பொறுப்பில் இருந்து அரச தரப்பும் எதிர்க்கட்சிகளும் விலகிக்கொண்டுள்ளன.

இருந்தும் தேர்தல் ஒன்று வரவேண்டும் என்ற ஆர்வம் ஜே.வி.பி.தவிர்ந்த எதிர்க்கட்சிகளுக்கு உள்ளூரஇருக்கவே செய்கின்றது. இதன் காரணமாகவே ஐக்கியதேசியக்கட்சி நாட்டில் மக்கள் போராட்டங்களை நடத்திவருகின்றது.

அரசும், விடுதலைப்புலிகளும் உடன்பட்டுக் கொண்ட பொதுக்கட்டமைப்பை அமுல் படுத்துவதற்கு பூரண ஆதரவு வழங்குவோம்- அரசாங்கத்தை கலைக்குமாறு கேட்கமாட்டோம் என ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர்களான ரணில் விக்கிரமசிங்கவும், பேராசிரியர் ஜீ.எல்.பீரிசும் ஏற்கனவே கூறியிருந்தனர்.

ஆயினும் அவர்கள் தாம் அளித்த உறுதிமொழிகளை மறந்து மீண்டும் ஒரு தேர்தலுக்கும் புதிய அரசுக்குமான களநிலையை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். அதன் ஒரு வடிவமே ஐக்கியதேசியக்கட்சி நாடளாவிய ரீதியில் நடத்தும் மக்கள் போராட்டமாகும்.

புதிய அரசை தெரிவு செய்யவேண்டும் என்ற முடிபில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் உறுதியாகவே இருக்கின்றார். சிறிலங்கா சுதந்திரக்கட்சியை ஆட்சிபீடம் எற்றவேண்டும் என நினைத்து ஐக்கிய தேசிய முன்னணியைக் கலைத்தது முதல் ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்தது வரையான நிகழ்வுகள் ஜனாதிபதிக்கு போதுமடா சாமி என்று ஆகிவிட்டது.

இதிலிருந்து விடுபடுவதற்கு உடனடியாக தேர்தல் ஒன்றை நடத்தவேண்டும் என்பது அவரின் விருப்பம். ஆயினும் அதனை தன்வாயால் கூறுவது. ஏன் தாயே! உமக்குத்தேர்தல் என்றால் கோயில் திருவிழா மாதிரியா? என்று மக்கள் கேட்பார்கள் அல்லவா? அதனால் அவர் மௌனம் காப்பதே ஒரே வழியென பேசாது இருக்கின்றார்.

அதேநேரம் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியோ, அரசின் பலயீனத்தை சாதகமாகப் பயன்படுத்தி முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தவேண்டுமென எண்ணுகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடந்தால் அது தமக்கே வெற்றியாக இருக்கும் என்பது அந்தக் கட்சியின் முடிபு. ஆக, பொதுத்தேர்தலை முதலில் நடத்த விரும்பும் ஜனாதிபதியும், ஜானதிபதித் தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும் என்ற நினைப்பில் பிரதான எதிர்க்கட்சியும் செயற்படுவதன் விளைவு இரண்டு தேர்தல்களும் விரைவில் நடப்பதாகவே இருக்கும்.

# பேரினவாதிகளின் அராஜகத்திற்கு எதிராக சர்வதேசம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## மாவை. சோ. சேனாதிராசா எம்.பி.

(யாழ்ப்பாணம்)

பௌத்த- சிங்கள பேரின வாதத்திற்கு எதிரான அனைத்து ஜனநாயக சக்திகளையும் தமிழ்த்தேசப்பற்றுள்ள மக்களும் அணி திரண்டு எத்தகையதொரு சூழ்நிலையை எதிர்கொள்ளவும், மக்கள் போராட்டங்களை நடத்தவும் ஆயத்தமாகுமாறு இலங்கைத் தமிழரசுக்கட்சியும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் அறை கூவல் விடுத்துள்ளன.

திருமலை படுகொலை குறித்து மாவை சோ. சேனாதிராசா எம்.பி. விடுத்துள்ள செய்திக்குறிப்பிலேயே இவ்வறை கூவல் விடுக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

திருகோணமலை செல்வநாயகபுரத்தில் தமிழீழவிடுதலைப் புலிகளின் அரசியல் துறை அலுவலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் கடற்புலிகளின் பகுதிகளில் ஒருவரான லெப்.கேணல் டிக்கான் உள்ளீட்ட இரு போராளிகளும இரு பொதுமக்களும் இராணுவச் சீருடை அணிந்து வந்த துப்பாக்கிதாரிகளினால் சுட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

திருகோணமலை பட்டினத்தை அண்டிய உயர் பாதுகாப்பு வலயத்தில் இராணுவக்கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் உள்ள விடுதலைப்புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தில் இடம்பெற்ற இப்படுகொலைகள் போர் நிறுத்த ஒப்பந்தத்தை அப்பட்டமாக மீறிய செயல் மட்டுமல்லாமல் போர் நிறுத்த ஒப்பந்தத்தையும் சமாதான சூழ்நிலையையும் சீா குலைத்துள்ளதாகவே கருதுகின்றோம்.

தமிழ்த்தேசிய இனத்தை அடக்கி,ஒடுக்கி அழித்துவிடக் கங்கணம் கட்டி நிற்கும் பேரினவாத சக்திகளினதும் அந்த எண்ணத்துடன் செயற்படும் இராணுவத்தினதும் இத்தகைய தொடர் நடவடிக்கைகள் தமிழ் மக்களிடம் வலிந்து போரைத் திணிக்கும் செயலாகவே கருதவேண்டியுள்ளது. இதற்கான பொறுப்பை அரசே ஏற்கவேண்டும்.

இன,மத முரண்பாடுகளில் எரிமலையாக திருமலை கொந்தளித்துக்கொண்டிருக்கிறது. இதனை வெடிக்க வைத்திடும் முயற்சியில் சிங்கள-பௌத்த பேரினவாத சக்திகள் இராணுவச்சீருடையில் திருமலையில் மையங்கொண்டு நிற்கின்றன.இதற்கு பௌத்த சீருடைகளும் முனைப்புடன் முன்னணி வகிக்கின்றன.

இச்சந்தர்ப்பத்திலும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும்,அரசும் உடன் விரைந்து பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்து போரைத்திணித்து நிற்கின்ற பௌத்த சிங்கள பேரினவாத சக்திகளைக் கட்டுப்படுத்த வேண்டும். அவை திருமலையில் இருந்து வெளியேற்ற வேண்டும் எனக கோருகின்றோம். இதற்குப் பெருத்தமான இராஜதந்திர நடவடிக்கைகளை சர்வதேச சமூகமும்,இராஜதந்திரிகளும் எடுக்க வேணடும் எனவும் வேண்டுகேள் விடுக்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ரு-19)

# மருந்தகம் புனரமைப்பு

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு அம்மன் மருநதகம், 2002ஆம் ஆண்டு முதல் உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்ததால் செயற்படமால் இருந்து வந்தது.

கடந்த வருடம் இம் மருந்தகம் சுகாதாரத் திணைக் களத்திடம் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்போது நிகொட் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புனரமைப்பு செய்யப்பட்டு வருகிறது.

இம மருந்தகம் 5.7 மில்லியன் ரூபா. செலவில் புனரமைக்கப்பட்டு வருகிறது. வேலைகள் முடிவுற்றதும் மருந்தகம் இயங்குவதற்கு சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவிககப்படுகிறது. (க-35)

# கொடிவாரம் மூலம் நிதிசேகரிப்பு

(மருதங்கேணி)

மந்திகை ஆதாரவைத்தியசாலையினை அபிவிருத்தி செய்வதற்கான அவசியத்தை மக்கள் மத்தியில் வலியுறுத்தும் வகையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் 25ஆம் திகதி வரை "கொடிவாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக பருததித்துறை ஆதார வைத்தியசாலையின அபிவிருத்தி சபை உப தலைவர் கே. தணிகாசலம் தெரிவித்துள்ளார்.

அவர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில், சுகாதார திணைக்களம வழங்கும் நிதிப்பற்றாக்குறையை நிவர்த்தி செயவதற்காகவே இக் கொடிவாரத்தை ஆரம்பிக்கவுள்ளோம. இதனால் கிடைக்கும் நிதியைக்கொண்டு வைத்தியசாலையை அபிவிருத்தி செய்தல், பொதுமக்கள் மாணவர்களின் செயற்பாடுகளை அபிவிருத்தி செயற்பாடுகளில இணைத்தல் போன்ற தேவைகளை நிறைவேற்றவுள்ளோம் என்றார். (க-35)

# கற்றல் வளநிலைய திறப்பு விழா

கரவெட்டி யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்தில் மாணவர்களுக்கான கற்றல் வள நிலையம் ஒன்று நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை பி.ப.2.00 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

பாடசாலை அதிபர் வ. கணபதிப்பிள்ளை தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சி. சிவநேசனும், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலய கல்விப்பணிப்பாளர் வ.செல்வராஜாவும, கௌரவ விருந்தினர்களாக பிரதிககல்விப் பணிப்பாளர் பி. அருளானந்தம்,கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி க.அம்பலவாணா,வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் ந. இன்பன் ,பாடசாலைக்கு கணனி அன்பளிப்பு செய்த நலன் விரும்பி ஐ.மார்க்கண்டு ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-101)

# யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் ஜூலை 15 முதல் 17 வரை இந்து மாநாடு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்துமாமன்றப் பொன் விழாவையொட்டி அகில இலங்கை இந்துமாமன்றமும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியும் இணைந்து நடாத்தும் இந்து மாநாடு யாழ.தேசிய கல்வியியற் கல்லூரியில் எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. இதன் ஆரம்பநிகழ்வு 15 ஆம் திகதி வெள்ளிகிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந நிகழ்வில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியயற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் வரவேற்புரையையும், ஆசியுரைகளை இந்துமத குரு பீடாதிபதி சிவஸ்ரீ ஐ. மகேஸ்வரக்குருக்கள், நல்லை ஆதீன முதல்வா் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனானந்தா மகராஜ் ஆகியோரும், தலைமையுரையை அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் வி. கயிலாசபிள்ளையும், தொடக்கவுரைய்ய சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியும் வழங்கவுள்ளனர்.

மேலும், வாழ்த்துரைகளை அருட்கவி.சீ.விநாசித்தம்பி, இளைப்பாறிய உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன், யாழ. அரச அதிபர் கே.கணேஷ் ,யாழ்ப்பாணப் பல்கலைக் கழக துணைவேந்தர் கலாநிதி சு. மோகனதாஸ், கம்பவாரிதி இ.ஜெயராஜ் ஆகியோரும் வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில், "மாநாட்டின் நோக்கம்" எனும் விளக்க உரையை செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் நிகழ்த்தவுள்ளார். மாநாட்டின் அறிமுகவுரையை பேராசிரியர் அ. சண்முகதாஸ் வழங்குவார். அதனைத் தொடர்ந்து கௌரவிப்பு நிகழ்வும், "இநது ஒளி" சிறப்பிதழ் வெளியீடும் இடம்பெறும்.

"என்றும் நிலைக்கும் எம் சமயம்" எனும் தலைப்பில் சிறப்புரையை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன சிறப்பு நிலைப் பேராசிரியரும், தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழக முது நிலை தமிழ் பேராசிரியருமான சா.ந.கந்தசாமி வழங்கவுள்ளார்.

இந்நிகழ்வின் அடுத்த நாள் நிகழ்வாக காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும். சிறப்பு அமர்வும், காலை 10-45 -12.45 மணிக்கு "வழிபாட்டு நோக்கில்" அமர்வு 1 ,"வாழவியல் நோககில்" அமர்வு -2,பகல் 1.45-3.15 மணிக்கு "வழிபாட்டு நோக்கில" அமர்வு-3, "வாழ்வியல் நோக்கில்" அமர்வு-4, மாலை 3.30-5.30 மணிக்கு "வழிபாட்டு நோக்கில்" அமர்வு-5, "வாழ்வியல் நோக்கில்" அமர்வு-6 என்பன இடம்பெறும்.

மறுநாள் 17ஆம் திகதி 9.00-10.30 மணிக்கு சிறப்பு அமர்வு காலை 10.45-12-45மணிக்கு "வரலாற்று நோக்கில்" அமர்வு-7, "மெய்யியல,விஞ்ஞான நோக்கில்" அமர்வு-8, பகல்1.45 -3.15 மணிக்கு "வரலாற்று நோக்கில்" அமர்வு -9, "கலை,கல்வியியல் நோக்கில்" அமர்வு-10 என்பன இடம்பெறும். (ரு-2)


## தினசரி தியானம்



### விவேகச் சிந்தனைகள்

நன்மை உனக்கு அருகில் இருப்பது ஆயினும் அது இன்னும் உண்மை நிலையை எய்தவில்லை. தீமையால் கலக்கமடையாமல் இருக்கக் கற்றுக்கொண்ட பின்னர் நன்மையாலும் மகிழ்ச்சியடையாமல் இருக்க நாம் கற்றுக் கொள்ளவேண்டும். மனிதர்கள் காட்டும் அன்பில் பிரதி பலனை எதிர்பார்ப்பது இருக்கும் . பக்தியில் அதற்கு இடமில்லை.

சுவாமி விவேகானந்தர்




மக்கள் சக்தி எழுச்சிப் பேரணியின் இறுதிநாள் நிகழ்வுகளில் ரணில் விக்கிரமங்க கலந்துகொண்ட காட்சி

# பிரதிப் பொறுப்பாளர் கட்டாய விடுமுறையில்

பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தின் நம்பிக்கைப் பிரதிப் பொறுப்பாளர் எச்.ஆர்.பெர்னாண்டோபுள்ளே கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுளார்.

பொது நிதியத்தைக் தவறான முறையில் கையாண்டமை, அரச சேவைக்கு களங்கம் விளைவித்தமை, தவறான ஆவணங்களைத் தயாரித்தமை போன்ற குற்றச்சாட்டுகள் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளன. (ற-8)

# இவ்வருடத்திற்குள்...

மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். அதற்கு அரசியல் கட்சிகளினதும், பொது அமைப்புக்களினதும் ஒத்துழைப்பு எமக்கு அவசியம்.

மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக தேர்தல் ஒன்றின் ஊடாக நாம் முன்னர் அரசாங்கத்தைப் பொறுப்பெடுத்தோம்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை ஒன்றினை ஏற்படுத்தினோம். 24 மணித்தியாலங்களுக்கு மின்சாரத்தினை வழங்கினோம்.

மீண்டும் அரிசிக்கு விலையைப் பெற்றுக் கொடுத்தோம். வீழ்ந்திருந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பினோம்.

தொழில்வாய்ப்பினை உருவாக்க ஆரம்பித்தோம். 2004 ஆம் ஆண்டுமுதல் நாட்டினை அபிவிருத்தி செய்வதற்காக 45 கோடி ரூபாவினைப் பெற்றுக்கொண்டோம்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் தான் சந்திரிகா குமாரதுங்க பாராளுமன்றத்தினைக் கலைத்தார். பிரிவினைவாதக் கட்சியான ஜே.வி.பியுடன் இணைந்து கூட்டமைப்பினை அமைத்தார்.

எமது அரசாங்கத்துடன் இணைந்துசெயற்படமுடியாது எனவும், எமது அரசாங்கம் போலியானது எனவும் தெரிவித்தார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையினால் நாடு காட்டிக் கொடுக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையினை இல்லாமல்செய்து விடுதலைப் புலிகளின் முகாம்களை இல்லாமல்செய்து சமாதானத்தை ஏற்படுத்துவதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

சவர்வதேச சந்தையில் எண்ணெய் விலை அதிகரித்தாலும், அவற்றை இலங்கையில் அதிகரிப்பதில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

எனினும் அந்த உறுதிமொழிகள் எதுவுமே நிறைவேற்றப்படவுமில்லை என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (ச-4)

## விடுதலைப்...

ஜெயந்த தனபாலவிற்கும் இடையே நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் முடிவில் அரசதரப்பு தனது பதிலினை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஊடாக தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு தெரிவித்திருந்தது.

அரசினால் அனுப்பப்பட்ட பதிலில் பூரணமான தகவல் எதுவும் இல்லை எனவும் அது போராளிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் என தமக்கு நம்பிக்கை இல்லை எனவும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது. (ச-4)


## QUATATION FOR SUPPLY OF INSTALLATION CENTRAL AIR CONDITION TO INSENTIVE CARE UNIT

Quotation are called for supply and installation of central air- conditioner to ICU TeachingHospital Jaffna the quotation will be accepted up to 27.07.2005 10.00 am

**Conditions:**

* The square area 350 M²
* Central air - condition
* Warranty two years
* After sales service for five years

Dr. S.Raviraj
Director
General Hospital
Jaffna

(C/1470)



## நியூ சிற்றி றேடேர்ஸ்

எம்மிடம் சகலவிதமான ரீவிக்களும், CD, VCD, DVD PLAYER களும், சகலவித மான றேடியோக்களும் மற்றும் கிறைண்டர்கள், மணிக்கூடுகள், மின்சார உபகர ணங்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

மேல்மாடி இல. 135/1 கஸ்தூரியார் வீதி,
(குளத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம்
T.P: 021 222 3226

(C-அ-1348)


# வித்துடல்கள் விதைப்பு

திருகோணமலை செல்வநாயகபுரத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் மூவரின் வித்துடல்கள் நேற்று மாலை விதைக்கப்பட்டன.

ஆலங்குளத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்றுமாலை 5.30 மணியளவில் நல்லடக்க நிகழ்வுகள் இடம்பெற்றன. கடந்த ஞாயிற்றுக்கிழமை இனந்தெரியாதோரால் படுகொலை செய்யப்பட்ட கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான லெப். கேணல் டிக்கான், இரண்டாம் லெப்.கேணல் இளம்புலி, விஜேந்திரராசா ஆகியோரின் பூதவுடல்கள் செஞ்சிலுவை சங்கத்தின் வாகனங்களின் மூலம் கொண்டு செல்லப்பட்டு நேற்று முன்தினம் சம்பூரில் வைத்து விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. அங்கு புலிகளின் அரசியல் துறை பணியகத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த வித்துடல் கள் சோலையூருக்கு கொண்டு செல்லப்பட்டு மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

பின்னர் மாவீரர்களின் வித்துடல் கள் மாவீரர் இல்லத்தில் விதைக்கப்பட்டன. (ச.4)

# அரசியல்துறைப் போராளிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு அழைப்பு

(கிளிநொச்சி)

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் பணியில் ஈடுபட்டிருந்த அரசியல்துறைப் போராளிகளின் முக்கியஸ்தர்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரசேங்களுக்கு அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் போராளிகளுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாத நிலையிலேயே அவர்கள் அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்களை சந்திப்பதற்கு தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அழைத்துள்ளதாகவும் கூறப்பட்டது. (ச-4)

# லொறி பள்ளத்தில் பாய்ந்தது 6 பேர் பலி; 12 பேர் படுகாயம்

## பதுளையில் நேற்று அதிகாலை சம்பவம்

(கொழும்பு)

பதுளை மாவட்டம் அப்புத்தளை என்னும் இடத்தில் நேற்று அதிகாலை 1மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் 6பேர் உயிரிழந்துள்ளனர். 12பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறி ஒன்று 700 அடி ஆழமான பள்ளத்தாக்கில் விழுந்ததினாலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர் அப்புத்தளை பதுளை, தியத்தலாவை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இராஜகிரி பிரதேசத்தைச் சேர்ந்த சிலர் மரணவீட்டிற்குச் சென்று விட்டு திரும்பும் போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.(ச-4)

# காந்தருபனின்...

தேசியக்கொடியினை மாலதி படையணி சிறப்புத்தளபதி கேணல் விதுசா ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து கடற் கரும்புலிகள் மேஜர் காந்தருபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத் ஆகியோரின் திருவுருவப் படங்களிற்கு அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஈகச்சுடரினை ஏற்றிவைக்க கடற்றொழிலாளர் சமாசங்களின் இணைப்பாளர் மோகன் மலர் மாலையினை அணிவித்தார்.

அறிவுச்சோலை மாணவர்களின் இசை நிகழ்வாக உடற் பயிற்சி கண்காட்சியும் வெளிஅரங்க நிகழ்வும் நடைபெற்றது. உள்ளரங்க நிகழ்வாக காந்தருபன் அறிவுச் சோலை, காந்தருபன் செஞ்சோலை மாணவ மாணவிகளின் கலை நிகழ்வுகள் நடைபெற்றன. (ச-4)

# பொதுக் கட்டமைப்புக்கு எதிரான...

இந்நிலையில் பிரதிவாதியான புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜயசிங்க சார்பில் ஆஜரான சட்டத்தரணி தமது வாதத்தில், பொதுக்கட்டமைப்பினை ரத்துச்செய்யக் கோருவதற்கு மனுதாரர் தரப்பிற்கு சட்ட அங்கீகாரம் இல்லை எனக் குறிப்பிட்டார்.

இதன்போது குறுக்கிட்ட பிரதம நீதியரசர் சரத்என்.சில்வா, மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு அவ்வுரிமை இருப்பதாக தெரிவித்தார்.

அரசாங்க கட்டுப்பாட்டின் கீழ் வராத பகுதிகளில் சுனாமி உதவியினை விநியோகிப்பதற்கு சீரான வழிமுறை ஒன்று அவசியம் என்று பிரதம நீதிஅரசர் நீதிமன்றில் தெரிவித்தார்.

இந்த விவகாரம் உணர்ச்சி பூர்வமயமானதும் சட்ட ரீதியானதுமாகும். எனினும் உயர் நீதிமன்றம் தேசிய விவகாரங்களை அநாவசியமாக தலையிட்டு பிரச்சினைகளை உருவாக்க மாட்டாது என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை சுனாமி நிவாரண சபை அமுலாக்கத்தை தாமதிக்குமாறு கோரி ஜாதிகஹெல உறுமய தாக்கல் செய்தமனு விசாரணை நடத்தப்படுவதற்கும் உயர் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது. (ச-4)

# திருமலையில் நேற்று...

பட்டன.

வீதிகளில் ஆங்காங்கே ரயர்கள் கொழுத்தப்பட்டன. நண்பகல் 12 மணியளவில் அநுராதபுரம் சந்தியை அடுத்துள்ள பகுதியில் காவலுக்கு நின்றிருந்த இராணுவச் சிப்பாய் மீது துப்பாக்கப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

துப்பாக்கிச்சூட்டில் சிறு காயங்களுக்கு இலக்காகிய அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டவர் துவிச்சக்கர வண்டியொன்றில் தப்பிச்சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடரந்து பிற்பகல் 3.30 மணியளவில் உப்புவெளி அலஸ் தோட்டம் பகுதியூடாகச் சென்ற கலகம் அடக்கும் பொலிஸாரின் ட்றக் வண்டி ஒன்று மீது கைக்குண்டொன்று வீசப்பட்டுள்ளது.

இவ்சம்பவத்தில் 13 பொலிஸார் காயமடைந்தனர். இவர்களில் மூவர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொது மருத்துவமனை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இக்குண்டு வீச்சு சம்பவத்தினை அடுத்து அலஸ் தோட்டம் அகதிமுகாமில் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றன. எனினும் எவரும் கைதுசெய்யப்படவில்லை.

இதற்கிடையே நேற்றுக்காலை 97 ஆம் கட்டைப் பகுதியின் ஊடாக சென்ற பொலிஸ் ஜீப் வண்டி மீது கைக்குண்டொன்று வீசப்பட்டது.

இச்சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை. எனினும் இதனையடுத்து இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தின்போது இராணுவச் சிப்பாய் ஒருவர் காயங்களுக்கு இலக்காகியுள்ளார்.

இச்சம்பவங்களை அடுத்து திருகோணமலை நகரை அண்டிய பகுதிகளில் பெருமளவான பொலிஸாரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டனர். வீதியில் சென்றவர்களும் சோதனைக்குட்படுத்தப்பட்டனர். இதனால் அங்கு பதற்றமான நிலை காணப்பட்டது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் நிலைமைகளை அவதானித்தனர். (ச-4)

## எரிகாயங்களுக்குள்ளானவர் யாழ். ஆஸ்பத்திரியில் மரணம்

(யாழ்ப்பாணம்)

எரிகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் கடந்த 5 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் நேற்று முன்தினம் மாலை யாழ். போதனா வைத்தியசாலையில் மரணமானார்.

வீட்டில் ஏற்பட்ட தவறுதலான தீவிபத்தில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த கொக்குவில் கிழக்கு கொக்குவிலைச் சேர்ந்த சுக்குசாமி பத்மநாதன் (வயது 49) என்பவரே மரணமானவராவார். (ச-19)

## கடத்தப்பட்ட...

அவரது சடலம் ஐயன்காணி காட்டுப்பகுதியல் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்துடன் தொடர்புடைய கொலையாளிகள் இதுவரை கண்டறியப்படவில்லை. (ச-4)


நிறைஞ்சனாஸ் சினிமா
சங்கானை
ரஜனி, கௌதமி நடித்த
தர்மதுரை
காட்சி நேரம்: 11.00, 2.45 06.00 (பு.நே)

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்.
சத்தியராஜ், சுனிதாவர்மா, வடிவேல் நடித்த
6'2"
காட்சி நேரம்: (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30
15.07.2005 முதல்
அர்ஜுன் சிநேகா, கிரண், வடிவேலு சேர்ந்து கலக்கும் அடுத்த காதல் நகைச்சுவையுடன்
சின்னா

மனோகரா
யாழ்ப்பாணம்
ஷங்கரின் இயக்கத்தில்
4வது வெற்றி வாரம்
சியான் விக்ரம், சதா, விவேக் ஆகியோரின் சிறப்பு நடிப்பில்
அந்நியன்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30
இசை: ஹாரிஸ் ஜெயராஜ்




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.